# சுயாதீன அறிக்கையிடல் பொறிமுறை *(IRM):* இலங்கை கலப்பு அறிக்கை *2019 – 2021 (Sri Lanka Hybrid Report 2019-2021)*

*சுயாதீன ஆய்வாளர் சச்சினி டி பொன்சேகா உடன் இணைந்து இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டது.*

## பொருளடக்கம்


***I. அறிமுகம் (Introduction)*** ***2***

***II. செயற்திட்டத்தின் மேலோட்டம் (Overview of the Action Plan)*** ***3***
*2.1. பொதுவான சிறப்புக்கூறுகள் மற்றும் பெறுபேறுகள்* *3*
*2.2. குறிப்பிடத்தக்க அர்ப்பணிப்புகள்* *6*
*2.3. கடமைப் பொறுப்புகளை நடைமுறைப்படுத்தல்* *13*

***III. பல்-துறைசார்ந்தவர்களின் செயன்முறை (Multi-stakeholder Process)*** ***21***
*3.1. பல்-துறைசார்ந்தவர்களின் செயன்முறை அடங்கிய செயற்திட்ட வடிவமைப்பு மற்றும் நடைமுறைப்படுத்தல்* *21*
*3.2. செயற்திட்ட நடைமுறைப்படுத்தலின் போது இலங்கையின் வினைத்திறன் பற்றிய மேலோட்டம்* *24*

***IV. முறையியலும் மற்றும் மூலங்களும் (Methodology and Sources)*** ***27***

## *I. அறிமுகம்*

*திறந்த அரசாங்க பங்குடமை (OGP) என்பது சர்வதேச தன்னார்வ முயற்சியாக அமைந்துள்ளதுடன், இதனூடாக அரசாங்க மறுசீரமைப்புகள் மற்றும் சிவில் சமூக தலைவர்களை ஒன்றிணைத்து செயற்திட்டங்களை வடிவமைத்து, அரசாங்கங்களை அதிகளவு உள்ளடக்கமான, பதிலளிக்கும் வகையிலமைந்த மற்றும் பொறுப்புக்கூறலுக்கு உள்வாங்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.செயற்திட்டத்துக்கான அர்ப்பணிப்புகளினூடாக ஏற்கனவே காணப்படும் முயற்சிகள் தூண்டப்படுவதுடன், தற்போது முன்னெடுக்கப்படும் மறுசீரமைப்புகளை பூர்த்தி செய்வதற்கு புதிய படிமுறைகளை இனங்காண்பது அல்லது புதிய விடயமொன்றை ஆரம்பிக்கச் செய்வது போன்வற்றின் அடிப்படையில் அவை கட்டியெழுப்பப்படும். திறந்த அரசாங்க பங்குடமையின் (OGP) சுயாதீன அறிக்கையிடல் பொறிமுறையினூடாக (IRM) அரசாங்கங்கள் தமது கடமைப்பொறுப்புகளை பின்பற்றுக்கின்றமையை கண்காணிக்கப்படுகின்றது. சிவில் சமூகத்தார் மற்றும் அரசாங்கத் தலைவர்கள் இந்த மதிப்பாய்வுகளை பயன்படுத்தி, முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள் மக்களின் வாழ்க்கையில் முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளனவா என்பதை கண்டறிகின்றனர்.*

*இந்த மதிப்பாய்வை முன்னெடுப்பதற்காக சுயாதீன ஆய்வாளரான சச்சினி டி பொன்சேகாவுடன் சுயாதீன அறிக்கையிடல் பொறிமுறை (IRM) கைகோர்த்திருந்தது. எதிர்கால கடமைப்பொறுப்புகளின் முன்னேற்றங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல்கள் தொடர்பில் அறிவிப்பதற்கு சுயாதீன அறிக்கையிடல் பொறிமுறை (IRM) எதிர்பார்க்கின்றது. சுயாதீன அறிக்கையிடல் பொறிமுறையின் (IRM) வழிமுறை தொடர்பான முழுமையான விளக்கத்துக்கு பின்வரும் இணையத்தளத்தைப் பார்க்கவும். https://www.opengovpartnership.org/about/independent-reporting-mechanism.*

*இந்த கலப்பு அறிக்கையினூடாக 2019-2021 காலப்பகுதிக்கான இலங்கையின் இரண்டாவது செயற்திட்டம் பற்றி ஆராயப்பட்டுள்ளது. இலங்கையின் தற்போதைய நிர்வாகத்தினால் திறந்த அரசாங்க பங்குடமை (OGP) செயன்முறை மீள ஆரம்பிப்பது தாமதமடைந்துள்ளதாலும், நடைமுறைப்படுத்தும் முகவர் அமைப்புகளில் திறந்த அரசாங்க பங்குடமை (OGP) தொடர்பு கொள்ளும் நபர்கள் இன்மையின் காரணத்தினாலும், தேசிய திறந்த அரசாங்க பங்குடமை (OGP) செயன்முறை பற்றிய சுயாதீன அறிக்கையிடல் பொறிமுறையின் (IRM) பிரசுரம் தாமதமடைந்துள்ளது. அதன் பிரகாரம், இந்த கலப்பு அறிக்கையினூடாக செயற்திட்டத்தின் வடிவமைப்பு மற்றும் நடைமுறைப்படுத்தல் பற்றி மதிப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. செயற்திட்டத்தின் அரப்பணிப்புகளின் சிறப்பியல்புகள், வலிமைகள் மற்றும் சவால்கள் பற்றிய சுயாதீன மீளாய்வை வழங்குகின்றது. கொள்கை மட்ட பெறுபேறுகள் தொடர்பில் கவனம் செலுத்தும் ஒட்டுமொத்த நடைமுறைப்படுத்தல் மதிப்பாய்வை இது வழங்குகின்றது. திறந்த அரசாங்க பங்குடமை (OGP) விதிமுறைகளின் பிரகாரம் அமைந்துள்ளமையை பரிசோதித்துள்ளதுடன், பொறுப்புக்கூறல் மற்றும் நீண்ட கால பயிலல் பற்றி அறிவிக்கின்றது.*

*IRM Refresh செயன்முறையினூடாக வெளிப்படுத்தப்பட்ட புதிய தயாரிப்புகளை செயற்படுத்துவதை 2021 ஜனவரி மாதம் முதல் சுயாதீன அறிக்கையிடல் பொறிமுறை (IRM) ஆரம்பித்திருந்தது[1]. சுயாதீன அறிக்கையிடல் பொறிமுறையினால் (IRM) முன்னெடுக்கப்பட்ட 350க்கும் அதிகமான சுயாதீன, ஆதாரம் அடிப்படையிலான மற்றும் துரித மதிப்பாய்வுகளின் பெறுபேறுகளின் பிரகாரமும், திறந்த அரசாங்க பங்குடமை (OGP) சமூகத்திடமிருந்து பெறப்பட்டிருந்த உள்ளீடுகளின் அடிப்படையிலும் புதிய வழிமுறை கட்டியெழுப்பப்பட்டுள்ளது. திறந்த அரசாங்க பங்குடமை (OGP) செயற்திட்டத்தில் பிரதான அம்சங்களில் எளிமையான, உரிய காலப்பகுதிக்கான, பொருத்தப்பாட்டுக்கு ஏற்புடைய தீர்வுகளை உள்வாங்குவதற்கும், பொறுப்புக்கூறல் மற்றும் பயிலலுக்கு பங்களிப்பு வழங்கும் அம்சங்களையும் உள்வாங்குவதற்கு சுயாதீன அறிக்கையிடல் பொறிமுறை (IRM) எதிர்பார்க்கின்றது.*

---

[1] IRM Refresh *பற்றிய மேலதிக தகவல்களுக்கு* https://www.opengovpartnership.org/process/accountability/about-the-irm/irm-refresh/

## II. செயற்திட்டத்தின் மேலோட்டம்

இலங்கையின் இரண்டாவது செயற்திட்டம் மேம்படுத்தப்பட்ட, ஒன்றிணைந்த செயன்முறையினூடாக வடிவமைக்கப்பட்டிருந்தது. குடிமக்களின் கேள்விகள் மற்றும் தேசிய அபிவிருத்தி முன்னுரிமைகளுக்கு பதிலளிக்கும் வகையில் பொறுப்புக்கூறல்கள் அமைந்திருந்தன. எவ்வாறாயினும், திட்டம் சமர்ப்பிக்கப்பட்டவுடன், அதன் நடைமுறைப்படுத்தல் தடைப்பட்டது. அதனைத் தொடர்ந்து, எந்தவொரு கடமைப் பொறுப்புகளும், எதிர்பார்த்த பெறுபேறுகளை ஏற்படுத்தவில்லை. திறந்த அரசாங்க பங்குடமையில் (OGP) தங்கியிருப்பதற்கு, இலங்கை அரசாங்கம் தேசிய திறந்த அரசாங்க பங்குடமை (OGP) செயன்முறையை மீள ஆரம்பிக்க வேண்டும்.

### 2.1. பொதுவான சிறப்புக்கூறுகள் மற்றும் பெறுபேறுகள்

2015 ஆம் ஆண்டில் இலங்கை திறந்த அரசாங்க பங்குடமை (OGP) உடன் இணைந்ததுடன், இதுவரையில் இரண்டு செயற்திட்டங்களைக் கொண்டிருந்தது. 2019 – 2021 காலப்பகுதி வரையான இலங்கையின் முன்னாள் நிர்வாகத்தினால் வடிவமைக்கப்பட்ட, இலங்கையின் இரண்டாவது செயற்திட்டத்தின் வடிவமைப்பு மற்றும் நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றை மதிப்பீடு செய்யும் வகையில் இந்த அறிக்கை அமைந்துள்ளது. பதினைந்து கடமைப்பொறுப்புகளில் ஏழு கடமைப்பொறுப்புகளினூடாக ஓரளவு அல்லது மாற்றத்தை ஏற்படுத்தும் தாக்கம் பதிவாகியிருந்தது (47% ஆன கடமைப்பொறுப்புகள்), முன்னைய செயற்திட்டத்துடன் ஒப்பிடுகையில் இது வீழ்ச்சியாகும், முன்னைய திட்டத்தில் 23 கடமைப்பொறுப்புகளில் 16 தூரநோக்குடையவையாக அமைந்திருந்தன (69%). இரு கடமைப்பொறுப்புகள் மாத்திரம் குறிப்பிடத்தக்களவு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன (12%). சுமார் அரைப்பங்கு கடமைப்பொறுப்புகள் ஆரம்பிக்கப்படவில்லை (15 கடமைப்பொறுப்புகளில் 7), இது முன்னைய செயற்திட்டத்துடன் ஒப்பிடுகையில் மிகவும் உயர்வாகும். முன்னைய திட்டத்தில் ஐந்துக்கும் குறைவான கடமைப்பொறுப்புகள் மாத்திரமே ஆரம்பிக்கப்படாமலிருந்தன (23 கடமைப்பொறுப்புகளில் 4). குறைந்தளவு நடைமுறைப்படுத்தல் காரணமாக எந்தவொரு கடமைப்பொறுப்புகளும் திறந்த அரசாங்கத்துக்கான ஆரம்பப் பெறுபேறுகளை வெளிப்படுத்தியிருக்கவில்லை. திறந்த அரசாங்க பங்குடமை (OGP) செயன்முறைக்கு முரணான வகையில் இலங்கை இயங்குவது அவதானிக்கப்பட்டிருந்தது,[1] சுயாதீன அறிக்கையிடல் பொறிமுறை (IRM) வழிகாட்டல்களுக்கமைய தகவல் களஞ்சியமொன்றை வெளியிடாததுடன்,[2] திறந்த அரசாங்க பங்குடமை (OGP) இணை-உருவாக்கம் மற்றும் பங்குபற்றல் நியமங்களின் பிரகாரம்[3] செயற்திட்டத்தின் நடைமுறைப்படுத்தலின் போது பங்கேற்கத் தவறியிருந்தது.

தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்காக, சுயாதீன அறிக்கையிடல் பொறிமுறையினால் (IRM) பின்வருவன பரிந்துரைக்கப்படுகின்றன:

- திறந்த அரசாங்க பங்குடமை (OGP) செயன்முறையை மீள ஆரம்பித்து, அமைச்சு மட்ட மற்றும் செயலாற்றக்கூடிய POC நியமித்து, திறந்த அரசாங்க பங்குடமை (OGP) காலப்பகுதியில் சிவில் சமூகத்துடன் திறந்த தொடர்பாடல்களை பேணும் வசதியை நிறுவுதல்.
- தற்போதைய நிர்வாகத்தின் முன்னுரிமைகள் மற்றும் பொது மக்களின் தேவைகள் போன்றவற்றின் அடிப்படையில் புதிய செயற்திட்டத்தை வடிவமைத்து, நடைமுறைப்படுத்தலுக்கு தீர்மானிக்கப்பட்ட தூரநோக்குடைய திட்டங்களில் கவனம் செலுத்தல்.
- பிராந்திய மற்றும் சர்வதேச திறந்த அரசாங்க பங்குடமை (OGP) கட்டமைப்புடன் மீள ஈடுபாட்டை ஏற்படுத்துவது,

**சாராம்சம்**

**பங்கேற்பு ஆரம்பம்:** 2015
**மீளாய்வுக்குட்படுத்தப்படும் செயற்திட்டம்:** 2019-2021
**IRM தீர்வு:** கலப்பின அறிக்கை
**கடமைப் பொறுப்புகளின் எண்ணிக்கை:** 15

**கடமைப்பொறுப்புகளின் மேலோட்டம்:**

- திறந்த அரசாங்க எதிர்பார்ப்புடனான கடமைப்பொறுப்புகள்: 14 (93%)
- மாற்றியமைக்கும் தாக்கத்தை எதிர்பார்க்கும் கடமைப் பொறுப்புகள்: 1 (1%)
- உறுதியளிக்கப்பட்ட கடமைப்பொறுப்புகள்: 4 (27%)
- பூர்த்தி செய்யப்பட்ட கடமைப்பொறுப்புகள்: 2 (12%)
- பாரியளவு முன்கூட்டிய பெறுபேறுகளுடனான கடமைப்பொறுப்புகள்: எதுவுமில்லை

**முன்னைய செயற்திட்டங்களிலிருந்து முன்கொண்டு வரப்பட்ட கொள்கைப் பகுதிகள்:**

- பொது சுகாதாரம்
- தகவலுக்கான அணுகல்
- சூழல்
- பெண்களின் உரிமைகள்
- மோசடி தவிர்ப்பு

**வளர்ந்து வரும் கொள்கைப் பகுதிகள்:**

- இடர் முகாமைத்துவம்
- e-விவசாயம்
- போக்குவரத்து
- சிறுவர் உரிமைகள்
- மாற்றுத்திறன் படைத்தவர்களின் உரிமைகள்
- உள்ளூராட்சி மன்றங்களில் பொது மக்களின் பங்கேற்பு

**இணை உருவாக்கத்துக்கு திறந்த அரசாங்க பங்குடமையின் (OGP) ஆகக் குறைந்த தேவைப்பாடுகளுக்கு இணங்கியிருந்தமை:**

- திறந்த அரசாங்க பங்குடமை (OGP) செயன்முறைக்கு முரணான வகையில் செயலாற்றியிருந்தமை: ஆம்

*திறந்த மற்றும் நல்லாட்சி தொடர்பான பகிர்வு அமர்வுகளில் பங்கேற்பது மற்றும் திறந்த அரசாங்க பங்குடமை (OGP) ஆதரவு அலகின் ஆதரவுடன் திறந்த அரசாங்க பங்குடமை (OGP) நியமங்களை நிவர்த்தி செய்வது மற்றும் பங்கேற்பு மற்றும் இணை உருவாக்கத்தின் ஆகக்குறைந்த தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வது.*

**வடிவமைப்பின் மேலோட்டம்**

*செயற்திட்டத்தின் கடமைப்பொறுப்புகளினூடாக பரந்தளவு கொள்கைப் பகுதிகள் பற்றி கவனம் செலுத்தப்பட்டிருந்தன. இதில் முன்னைய செயற்திட்டத்திலிருந்து முன்கொண்டு வரப்பட்டிருந்த சுகாதாரம், அரசாங்க தகவல் நிலையம், திறந்த தரவுகள், தேசிய சூழல் சட்டம், பெண்கள் உரிமைகள், மோசடி தவிர்ப்பு மற்றும் தகவல் அறியும் உரிமை போன்றன அடங்கியிருந்தன. கடமைப்பொறுப்பில் இடர் முகாமைத்துவம், e-விவசாயம், போக்குவரத்து, சிறுவர் நலன், மாற்றுத்திறன் படைத்தவர்களின் உரிமைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களில் பொது மக்களின் பங்கேற்பு போன்றன தொடர்பான புதிதாக உள்ளடக்கப்பட்டிருந்தன.*

*இலங்கையின் முதலாவது செயற்திட்டத்துடன் ஒப்பிடுகையில் இந்தத் திட்டம் குறைந்தளவு தூரநோக்குடையதாக அமைந்திருந்தாலும், சில கடமைப்பொறுப்புகளினூடாக திறந்த அரசாங்கத்தை ஏற்படுத்துவதற்கு சிறந்த வாய்ப்புகளை வழங்கியிருந்தன. கடமைப்பொறுப்பு 2 இன் கீழ், சொத்துக்கள் வெளிப்படுத்தும் அலுவலகம் மற்றும் அதிகாரிகளின் சொத்துக்கள் பிரகடனத்துக்கான ஒன்லைன் பொதுக் கட்டமைப்பு போன்றன நிறுவப்படவிருந்தன. கடமைப்பொறுப்பு 3 இனூடாக, தகவல் கோரிக்கைகளை அணுகுவதை விரிவாக்கம் செய்வது மற்றும் வெளிப்படுத்தல்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு நட்பான தகவல் கோரிக்கை கட்டமைப்பையும் அரசாங்க e-பதிவு நிர்வாக கட்டமைப்பை நிறுவுவதும் எதிர்பார்க்கப்பட்டது. கடமைப்பொறுப்பு 9 இனூடாக, மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமை சட்டத்தை நிறைவேற்றுவதற்கு அவசியமான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டிருந்தன. கடமைப்பொறுப்பு 12 இனூடாக, 2020 ஆம் ஆண்டளவில் பெண்களுக்கு எதிரான சகல விதமான பாகுபாட்டையும் இல்லாமல் செய்யும் மாநாட்டின் (CEDAW) தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது.*

*இந்த செயற்திட்டத்தின் வடிவமைப்பு செயன்முறையின் போது அரசாங்கம் மற்றும் சிவில் சமூகத்திடையே உறுதியான கைகோர்ப்பு அவதானிக்கப்பட்டிருந்தது. இலங்கையின் முன்னைய அரசாங்கத்தினால் முன்னைய செயற்திட்டத்துடன் ஒப்பிடுகையில், அதிகளவு கைகோர்ப்பு செயன்முறையினூடாக இந்த செயற்திட்டத்தின் வடிவமைப்பு நடவடிக்கைகள் மேற்பார்வை செய்யப்பட்டிருந்தன. சகல மாகாணங்களிலும் அரசாங்க மற்றும் சிவில் சமூக நிறுவன (CSO) பங்காளர்களுடன் கலந்தாலோசனைகள் இடம்பெற்றதுடன், இதில் தகைமை வாய்ந்த மூன்றாம் தரப்பு கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் பயிலல் நிபுணர்கள் அடங்கியிருந்தனர்.*

**நடைமுறைப்படுத்தலின் மேலோட்டம்**

*2019 நவம்பர் மாதம் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலைத் தொடர்ந்து, அரசாங்கத்தின் நடைமுறைப்படுத்தும் பணி பெரும்பாலும் முழுமையாக தடைப்பட்டது. புதிய அரசாங்கத்தினால் திறந்த அரசாங்க பங்குடமை (OGP) தொடர்பு பகுதி நியமிக்கப்படவில்லை என்பதுடன் திட்டத்தின் நடைமுறைப்படுத்தலையும் பின்பற்றவில்லை. பெரும்பாலான கடமைப்பொறுப்புகளில் ஆகக்குறைந்த முன்னேற்ற நிலை பதிவாகியிருந்தது. எவ்வாறாயினும், சிவில் சமூகத்தின் சில துறைகளில் சுயாதீனமான முறையில் சில மைல்கற்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.*

*செயற்திட்டத்தின் எந்தவொரு உறுதி மொழியளிக்கப்பட்ட கடமைப்பொறுப்புகளும் போதியளவு நடைமுறைப்படுத்தலை வெளிப்படுத்தவில்லை. கடமைப்பொறுப்பு 2 இன் கீழ், சொத்துக்கள் பிரகடனம் தொடர்பான சில திட்டங்களை ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் ஸ்ரீ லங்கா முன்னெடுத்திருந்த போதிலும், சொத்துக்கள் பிரகடனத்துக்கான அலுவலகத்தை நிறுவுவதற்கு அல்லது ஒன்லைன் சொத்துக்கள் பிரகடன கட்டமைப்பொன்றை நிறுவுவதற்கு அரசாங்கம் எவ்வித அலுவலகத்தையும் நிறுவவில்லை. வெளிப்படுத்தல் தொடர்பில் முன்னேற்றம் காணப்பட்ட போதிலும், கடமைப்பொறுப்பு 3 இன் எஞ்சிய பகுதிகளில் தகவலை அணுகுவது முன்னெடுக்கப்படவில்லை. மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் சட்டமூலம் தடைப்பட்டிருந்தது (கடமைப்பொறுப்பு 9) மற்றும் எதிர்பார்க்கப்பட்ட CEDAW தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை (கடமைப்பொறுப்பு 12).*

*போக்குவரத்து மற்றும் உள்ளூராட்சி மன்றங்களில் பொது மக்களின் ஈடுபாடு தொடர்பில் செயற்திட்டத்தில் சில முன்னேற்றங்கள் பதிவாகியிருந்த போதிலும், அரசாங்க செயன்முறையில் எவ்விதமான குறிப்பிடத்தக்க மாற்றத்தையும் ஏற்படுத்தியிருக்கவில்லை. கடமைப்பொறுப்பு 13 இனூடாக மேல் மாகாணத்தின் மூன்று உள்ளூராட்சி மன்றங்களில் பொது மக்களின் பங்கேற்பு தொடர்பான மாதிரித் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. மன்றங்களின் வரவு செலுத்திட்டங்களுக்கு பிரேரணைகளை வழங்குவது, தகவல் அறியும் உரிமை கோரல்களை சமர்ப்பிப்பது மற்றும் மன்றங்களின் அமர்வுகளின் போது அவதானிப்பாளர்களாக இயங்குவது மற்றும் மன்றத்தின் தற்காலிக அங்கத்தவர்கள் மற்றும் ஆலோசனைக் குழுக்களில் அங்கத்தவர்கள் போன்ற செயற்பாடுகளில் பொது மக்கள் பங்கேற்றிருந்தனர். கடமைப்பொறுப்பு 14 இன் கீழ், பயணிகளின் தேவைகள் தொடர்பில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு ஆய்வை முன்னெடுத்திருந்ததுடன், போக்குவரத்து தகவல்கள் மற்றும் முறைப்பாட்டு பகுதியை இணையத்தளத்தில் பட்டியலிட்டிருந்தது.*

[1] *"செயன்முறைசார் மீளாய்வு"* ("Procedural Review,") *திறந்த அரசாங்க பங்குடமை,* https://www.opengovpartnership.org/procedural-review/.

[2] "*ஒன்லைன் ஆவண களஞ்சியப்படுத்தல் தொடர்பான சுயாதீன அறிக்கையிடல் பொறிமுறை (IRM) வழிகாட்டல்"* ("IRM Guidance for Online Repositories,") *திறந்த அரசாங்க பங்குடமை* (*மார்ச்* 2020), https://www.opengovpartnership.org/documents/irm-guidance-for-online-repositories/.

[3] *செயன்முறைக்கு முரணாக செயலாற்றல் – நாடு பின்வருவனவற்றில் ஏதேனும் ஒன்றை பூர்த்தி செய்யாதிருத்தல்* (1) *செயற்திட்டத்தின் வடிவமைப்பின் போது "ஈடுபடாமை" அல்லது நடைமுறைப்படுத்தலின் போது "அறிவிக்காமை", அல்லது* (2) *சுயாதீன அறிக்கையிடல் பொறிமுறை (*IRM) *வழிகாட்டுதலுக்கமைய, தேசிய திறந்த அரசாங்க பங்குடமை (OGP) இணையத்தளம்/இணையப்பக்கத்தில் அரசாங்கம் ஆவண களஞ்சியப்படுத்தலை திரட்ட, வெளியிட மற்றும் ஆவணப்படுத்த தவறியிருந்தமை.*

## *2.2. குறிப்பிடத்தக்க அர்ப்பணிப்புகள்*

*செயற்திட்டத்தின் இரண்டு வருட காலப்பகுதியினுள் பெறுபேறுகளை அவதானிக்க முடியாமலிருக்கும் என்பதை சுயாதீன அறிக்கையிடல் பொறிமுறை (IRM) ஏற்றுக் கொள்வதுடன், ஆரம்பகட்ட பெறுபேறுகளை ஆராய்வதற்கு ஆகக்குறைந்தது குறிப்பிடத்தக்களவு பூர்த்தியை எய்த வேண்டியிருக்கும். கலப்பின அறிக்கைக்காக, **"திறந்த அரசாங்கத்தை ஏற்படுத்தியதா?"** (DIOG) எனும் குறிகாட்டியை சுயாதீன அறிக்கையிடல் பொறிமுறை (IRM) பயன்படுத்தி, சம்பந்தப்பட்ட திறந்த அரசாங்க பங்குடமை (OGP) பெறுமதிகளுக்கு பொருத்தமான அரசாங்க செயன்முறைகளில் ஏற்படுத்தியிருந்த மாற்றங்களின் பிரகாரம் ஆரம்ப பெறுபேறுகளை காண்பிக்கும். தொடர்ந்து, சுயாதீன அறிக்கையிடல் பொறிமுறை (IRM) புதிய பெறுபேற்று அறிக்கையில் DIOG ஐ ஒரு குறிகாட்டியாக பயன்படுத்தாது.*

*பிரிவு 2.2 இனூடாக, தூரநோக்குடைய அல்லது உறுதியான வடிவமைப்புடன், அல்லது தெளிவின்மை மற்றும்/அல்லது தூரநோக்கற்ற வகையில் அமைந்திருந்த போதிலும் அரசாங்க செயன்முறைகளில் ''பாரிய'' அல்லது ''மிகச்சிறந்த'' மாற்றத்தை ஏற்படுத்தி வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.[1] மேலே விளக்கமளிக்கப்பட்ட விதிமுறைகளை பூர்த்தி செய்த கடமைப்பொறுப்புகள் தொடர்பான சுயாதீன அறிக்கையிடல் பொறிமுறையின் (IRM) கண்டறிதல்களின் பகுப்பாய்வை இந்தப் பிரிவு வழங்குவதுடன், செயற்திட்டத்தின் அனைத்து கடமைப்பொறுப்புகளின் பூர்த்தி நிலை தொடர்பான மேலோட்டம் பிரிவு 2.3 இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.*

| **கடமைப்பொறுப்பு 2: சொத்துக்கள் பிரகடன கட்டமைப்பு** | |
|---|---|
| **கடமைப் பொறுப்பின் இலக்கு** | *சொத்துக்கள் வெளிப்படுத்தல் அலுவலகம் என்பதை நிறுவுவது, சம்பந்தப்பட்ட கையகப்படுத்தல் தொடர்பான வருடாந்த அறிக்கையை வெளியிடுவது, மற்றும் ஒன்லைன் சொத்து பிரகடன கட்டமைப்பொன்றை நிறுவி அதனை பிரச்சாரப்படுத்தல் போன்றவற்றினூடாக பொது அதிகாரிகளின் சொத்துக்களின் வெளிப்படைத்தன்மையை அதிகரிக்கச் செய்வதாக இந்த கடமைப்பொறுப்பு அமைந்துள்ளது. சொத்துக்கள் மற்றும் கடப்பாடுகள் பிரகடன சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பான முன்னைய செயற்திட்டத்தின் மட்டுப்படுத்தப்பட்ட நடைமுறைப்படுத்தல்களின் அடிப்படையில் இந்தக் கடமைப்பொறுப்பு கட்டியெழுப்பப்பட்டுள்ளது.[2]*<br><br>*சொத்துக்கள் மற்றும் கடப்பாடுகள் பிரகடன சட்டத்தின் பிரகாரம், பாராளுமன்ற அங்கத்தவர்கள், நீதவான்கள், அரச திணைக்களங்கள், அமைச்சுகளின் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் பொது அதிகாரிகள், பொது கூட்டாண்மைகளின் தலைமை அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள், பொது அலுவலகத்துக்காக தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட அதிகாரிகள் போன்ற அலுவலகத்தில் பொறுப்பேற்று மூன்று மாத காலப்பகுதியினுள் தமது மற்றும் தமது குடும்ப அங்கத்தவர்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை பிரகடனம் செய்ய வேண்டும்.[3] 1975 ஆம் ஆண்டு முதல் இந்த சட்ட அமுலில் இருந்த போதிலும், வெளியிடல்களை உறுதி செய்தல் மற்றும் பின்பற்றாமை தொடர்பில் கவனம் செலுத்தலில் பாரதூரமான குறைபாடுகள் காணப்படுகின்றன.[4] செயற்திட்டத்துடன், பெரும்பாலான அமைப்புகள் சட்ட ரீதியில் அவசியமான சொத்துகள் பிரகடனங்களை பின்பற்றுவதில்லை மற்றும் சொத்துக்கள் பிரகடனம் தொடர்பான கட்டமைப்பு கடதாசியில் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.[5] கட்டணம் செலுத்துவதனூடாக மாத்திரம் பாராளுமன்ற உறுப்பினர்களின் சொத்துப் பிரகடனங்களை பொது மக்களுக்கு பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன், அவ்வாறான தகவல்களை பரந்தளவில் பகிர்ந்து கொள்வதை சட்டம் தடை செய்துள்ளது.[6]*<br><br>*குறிப்பிடப்பட்டுள்ளதைப் போது முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டிருக்குமாயின், சொத்துக்கள் பிரகடனங்கள் தொடர்பில் அணுகலை அதிகரிப்பதில் ஓரளவு தாக்கத்தை இந்தக் கடமைப்பொறுப்பு ஏற்படுத்தியிருக்கும். எவ்வாறாயினும், தமது சொத்துகளை வெளிப்படுத்தும் அதிகாரிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது தொடர்பான செயன்முறை ஒன்றை இந்தக் கடமைப் பொறுப்பு குறிப்பிடவில்லை. நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் போதியளவு தெளிவற்ற தன்மையும் நிலவியது.[7]* |
| **திறந்த அரசாங்கத்தை ஏற்படுத்தியிருந் ததா?** | *சொத்துக்கள் பிரகடனம் தொடர்பில் ஒன்லைன் பொதுக் கட்டமைப்பை நிறுவுவது, சொத்துக்கள் வெளிப்படுத்தலுக்கான அலுவலகம் அல்லது சொத்துக்கள் வெளிப்படுத்தல் உறுதிப்படுத்தலுடன் தொடர்புடைய சட்டநடவடிக்கை மேற்கொள்வது தொடர்பான வருடாந்த அறிக்கைகள் தொடர்பில் எவ்விதமான* |

| | |
|---|---|
| **எல்லையளவு** | முன்னேற்றங்களும் பதிவு செய்யப்படவில்லை. நடைமுறைப்படுத்தல் காலப்பகுதியில் ஆரம்பத்தில், ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் ஸ்ரீ லங்கா மற்றும் சர்வதேச கணனி மென்பொருள் தயாரிப்பு நிறுவனமான WSO2 ஆகியன இணைந்து ஒன்லைன் பொதுக் கட்டமைப்பொன்றை இலவசமாக வடிவமைத்து வழங்க முன்வந்திருந்தன. ஆனாலும் இந்தக் கட்டமைப்புக்காக அரசாங்கம் ஆரம்பத்தில் வேறு திட்டமொன்றைக் கொண்டிருந்தது. ஆனாலும் இது நடைமுறைப்படுத்தப்படவில்லை. இறுதியாக, பொது மக்களுக்காக பொதுத் தகவல் திட்டமொன்றை அரசாங்கம் முன்னெடுக்காத போதிலும், ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் ஸ்ரீ லங்காவினால் சொத்துப் பிரகடனம் தொடர்பில் பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கு எழுதுதல், ஊடகங்களில் ஆக்கங்களை வெளியிடல், பதாதைகளை வெளியிடல் மற்றும் சமூக வலைத்தள பிரச்சாரங்களை முன்னெடுத்தல் போன்றன இவற்றில் அடங்கியிருந்தன. இதன் காரணமாக சொத்துக்கள் பிரகடனம் தொடர்பில் பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதுடன், சம்பந்தப்பட் சிவில் சமூக அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகளிடமிருந்து சொத்துக்கள் பிரகடனத்துக்கான சொற்பளவு கேள்வியையும் தோற்றுவித்திருந்தது.[8] இதன் பெறுபேறாக, 2021 பெப்ரவரி மாதமளவில், 12 தனிநபர் பாராளுமன்ற உறுப்பினர்கள் சுயமாக முன்வந்து தமது சொத்துக்கள் பிரகடனத்தை வெளியிட்டிருந்தனர்.[9] இது நேர்த்தியான படிமுறையாக அமைந்திருந்த போதிலும், ஏனைய 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் இதனை பின்பற்றியிருக்கவில்லை.<br><br>சொத்துகள் பிரகடனத்துக்கு ஒன்லைன் கட்டமைப்பொன்றை நிறுவுவதற்கான எதிர்கால முயற்சிகள் முன்னெடுக்கப்படுமாயின், தமது சொத்துகளை பிரகடனம் செய்யும் பொது அதிகாரிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்வதற்கும், வெளிப்படுத்தப்படும் சொத்துக்களின் தகவல்கள் தவறானவையாக இல்லாமலிருப்பதை உறுதி செய்யும் பொறிமுறை அல்லது அனுகூல உரிமையாண்மை போன்ற சொத்துக்கள் பற்றிய தெளிவற்ற தகவல்களை இல்லாமல் செய்வதற்கு முயற்சிகளை மேற்கொள்ள சுயாதீன அறிக்கையிடல் பொறிமுறை (IRM) பரிந்துரைக்கின்றது. சம்பந்தப்பட்ட தகவல்களை அணுகல் மற்றும் போர்டலின் பயன்பாடு தொடர்பில் பொது மக்களின் கருத்துகளைப் பெற்றுக் கொள்ளும் பொறிமுறையை உள்ளடக்கியிருப்பதும் பெறுமதி வாய்ந்ததாக அமைந்திருக்கும். |

| **கடமைப்பொறுப்பு 3: தகவல் அறியும் உரிமை** | |
|---|---|
| **கடமைப் பொறுப்பின் இலக்கு** | அங்கவீனமானவர்களுக்கு நட்பான தகவல் அறியும் உரிமை (RTI) கட்டமைப்பு மற்றும் அரசாங்க e-பதிவு முகாமைத்துவ கட்டமைப்பு ஒன்றை நிறுவுவது ஆகியவற்றை இந்தக் கடமைப்பொறுப்பு இலக்காகக் கொண்டிருந்தது. 2019 ஆகஸ்ட் மாதமளவில் முன்வைக்கப்படும் தகவல் அறியும் உரிமை கோரிக்கைகளை 50சதவீதத்தினால் அதிகரிப்பதற்கும், அதனைத் தொடர்ந்து 2020 ஆகஸ்ட் மாதமளவில் இந்தப் பெறுமதி 75 சதவீதமாக அதிகரிப்பதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. முன்னைய செயற்திட்டத்தின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டிருந்ததுடன், 2017 ஆம் ஆண்டின் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் நடைமுறைப்படுத்தல் மற்றும் உறுதிப்படுத்தல் மற்றும் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் நியமனம் ஆகியவற்றின் தொடர் தன்மையாகவும் அமைந்திருந்தது.[10] இலங்கை அரசமைப்பின் 14A சரத்தின் பிரகாரம் இந்த சட்டம் அமைந்திருந்ததுடன்,[11] பிராந்தியத்தின் சிறந்ததாகவும், உலகின் நான்காவது அதி சிறந்ததாகவும் சர்வதேச தகவல் அறியும் உரிமை தரப்படுத்தல் அமைப்பினால் தரப்படுத்தப்பட்டிருந்தது.[12] எவ்வாறாயினும், இதன் நடைமுறைப்படுத்தல் என்பது சம்பந்தப்பட்ட அரசாங்க பங்காளர்களிடமிருந்து மட்டுப்படுத்தப்பட்ட கவனத்தை பெற்றிருந்தது.[13] ஒன்லைன் ஊடாக தகவல்களை வெளிப்படுத்துவதற்கான ஒதுக்கீடுகள் காணப்பட்ட போதிலும், 89 சதவீதமான பொது அதிகார அமைப்புகளின் செயற்திறன் திருப்திகரமானதாக அமைந்திருக்கவில்லை என்பதை Verité research கண்டறிந்திருந்தது.[14]<br><br>தகவலை பெற்றுக் கொள்வதில் ஓரளவு வாய்ப்பை வழங்குவதாக இந்தக் கடமைப்பொறுப்பு அமைந்திருந்தது. முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால், கோரிக்கைகள் மற்றும் பதிலளிப்புகள் |

| | |
|---|---|
| | தொடர்பில் பதிவுகளை பேணல் மற்றும் தரவுகளை அணுகல் ஆகியவற்றை மேம்படுத்தியிருக்கும். இந்தக் கடமைப்பொறுப்பின் மைல்கற்கள் பொதுவில் உறுதி செய்து கொள்ளக்கூடியவையாக இருந்தாலும், முன்வைக்கப்படும் தகவல் அறியும் உரிமை (RTI) கோரிக்கைகளின் எண்ணிக்கையை எவ்வாறு அதிகரிக்கச் செய்யும், பொது அதிகார தரப்பின் பதிலளிப்புகளை அதிகரிக்கும் அல்லது பாவனை மற்றும் அணுகலில் நிலவும் கட்டுப்பாடுகளை குறைக்கும் என்பன தொடர்பில் தெளிவாக குறிப்பிடத்த தவறியிருந்தது. |
| **திறந்த அரசாங்கத்தை ஏற்படுத்தியிருந்ததா?**<br><br>**மாற்றத்தை ஏற்படுத்தவில்லை** | இந்தக் கடமைப்பொறுப்பின் கீழ், தகவல் அறியும் உரிமை (RTI) ஆணைக்குழுவின் கண்டிப்பான கடப்பாடுகள் நிலவிய போதிலும், மாற்றுத்திறனாளிகளுக்கு நட்பான தகவல் அறியும் உரிமை (RTI) கோரிக்கை கட்டமைப்பு நிறுவப்படவில்லை என்பதுடன், அரசாங்கத்தின் e-பதிவு முகாமைத்துவ கட்டமைப்பு நிறுவப்படவில்லை. வெளிப்படுத்தலை மேம்படுத்துவதற்கான மையப்படுத்திய முயற்சிகள் எதுவும் காணப்படவில்லை என்பதுடன், மூன்று உள்ளூராட்சி மன்றங்களுக்கு வெளிப்படுத்தும் இணையத்தளங்களை ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் ஸ்ரீ லங்கா முன்னெடுத்திருந்ததுடன், UNDP இனால் இலவசமான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. மையப்படுத்தப்பட்ட கட்டமைப்பொன்று காணப்படாததன் காரணமாக, தகவல் அறியும் உரிமை (RTI) கோரிக்கைகளின் எண்ணிக்கையை கணிப்பிட முடியாத நிலை நிலவியது. கொவிட்-19 காலப்பகுதியில் தமது கட்டமைப்பினூடாக முன்னெடுக்கப்பட்ட தகவல் அறியும் உரிமை (RTI) கோரிக்கைகளில் வீழ்ச்சி ஏற்பட்டிருந்ததை ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் ஸ்ரீ லங்கா அவதானித்திருந்தது. கோரிக்கை செயன்முறை தொடர்பான நபரின் அம்சங்கள் மிகவும் கடினமடைந்திருந்தன. அதேவேளை, தகவல் அறியும் உரிமை (RTI) கோரிக்கைகளுக்கு பதிலளிக்கும் செயன்முறையும் தொற்றுப் பரவல் காரணமாக தாமதமடைந்திருந்தன. போதியளவு அரச அதிகாரிகள் பணியில் இல்லாமல் இதற்கு காரணமாக இருந்தது.[15] 2020 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்டிருந்த கோரிக்கைகளில் 79% ஆனவற்றுக்கு பதில் வழங்கப்பட்டிருந்தன. 2017 – 2019 காலப்பகுதியில் இந்தப் பெறுமதி 84% ஆக காணப்பட்டது.[16] 2019 ஆம் ஆண்டு முதல் வருடாந்த அறிக்கைகள் எதனையும் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு வெளியிடவில்லை. இந்த கடமைப்பொறுப்பு எதிர்கால செயற்திட்டத்துக்காக முன்கொண்டு செல்லப்படுமாயின், வழங்கப்படும் தகவல்களின் தரம் தொடர்பில் மதிப்பாய்வு ஒன்றை மேற்கொள்ளுமாறு சுயாதீன அறிக்கையிடல் பொறிமுறை (IRM) பரிந்துரைக்கின்றது. தகவல் அறியும் உரிமை (RTI) கட்டமைப்பை பொது மக்கள் பயன்படுத்துவதை அதிகரிக்கச் செய்வதற்கு பொது விழிப்புணர்வு செயற்திட்டமொன்றும் முன்னெடுக்கப்படலாம். |

| **கடமைப்பொறுப்பு 9: அங்கவீன உரிமைகள் சட்ட மூலம்** | |
|---|---|
| **கடமைப் பொறுப்பின் இலக்கு** | பங்கேற்பு செயன்முறையினூடாக, 2007 ஆம் ஆண்டு இடம்பெற்ற மாற்றுத்திறன் படைத்த நபர்களுக்கான ஐக்கிய நாடுகள் மாநாட்டின் (UNCRPD) போது அதன் தீர்மானங்களுக்கு இலங்கை உடன்பட்டு கையொப்பமிட்டு, 2016 ஆம் ஆண்டில் அவற்றை ஏற்று செயலாற்ற முன்வந்திருந்த அம்சங்களை செயற்படுத்தும் வகையில் இந்த கடமைப்பொறுப்பு அமைந்திருந்தது. முன்னர், 1996 ஆம் ஆண்டில் மாற்றுத்திறன் படைத்தவர்களை பாதுகாக்கும் சட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தது. கடந்த 25 வருடங்களில் கொள்கை வடிவமைப்புகளை இந்த சட்டம் கொண்டிருக்காத நிலையில், புதிய அங்கவீன உரிமை சட்டமூலம் நிறைவேற்றம் 15 வருடங்களுக்கு மேலாக தடைப்பட்டிருந்தது. அங்கவீனத்துக்கான தேசிய கொள்கையின் அனுமதியின் பிரகாரம், 2004 ஆம் ஆண்டில் சட்டமூலத்தை வரைவதற்கு செயற்குழு நியமிக்கப்பட்டிருந்தது. தொடர்ந்து வந்த அரச நிர்வாகங்களினால் இந்த சட்டமூலம் தொடர்ச்சியாக திருத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், சட்ட வரைஞர் திணைக்களத்துக்கு அப்பால் இந்த சட்டமூலம் முன்னேற்றத்தை காணவில்லை.[17] செயற்திட்டத்தில், அங்கவீன உரிமை சட்டமூலத்தில் அங்கவீன உரிமைகள் ஆணைக்குழு ஒன்றை நிறுவுவதற்கு முன்மொழிந்திருந்தது. இந்த ஆணைக்குழுவினால் மாற்றுத்திறன் படைத்த நபர்கள், பிரதிநிதித்துவ நிறுவனங்கள் மற்றும் அரசாங்க மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிடையே தொடர்புகளை பேணும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். மாற்றுத்திறன் படைத்தவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பது |

| | |
|---|---|
| | *அல்லது அவர்களுக்கு நீதி கிடைக்கச் செய்வது மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான மனித உரிமைகள் என்பது இந்த ஆணைக்குழுவின் கடப்பாடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.*[18]<br><br>*அங்கவீனமுற்றவர்களுக்கான உரிமைகள், அங்கவீனமுற்றவர்களுக்காக பொது மக்களின் பங்களிப்பை ஆரம்பிப்பது போன்றன தொடர்பில் ஓரளவு தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் இந்த கடமைப்பொறுப்பு அமைந்திருக்கக்கூடும். மாற்றுத்திறன் படைத்தவர்கள் இலங்கையின் சமூகத்தில் பெரும்பாலும் ஓரங்கட்டப்படுவதுடன், சட்டபூர்வ உரிமை-அடிப்படையிலான வழிமுறை இன்மையால் பொதுக் கட்டமைப்புகளில் முழுமையான பங்கேற்புக்கு மறுக்கப்படுகின்றனர்.*[19] *UNCPRD இல் கைச்சாத்திட்டதன் பின்னர் சம உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பான கொள்கைகள் மற்றும் ஒழுங்குவிதிமுறைகளின் முன்னேற்றம் தடைப்பட்டுள்ளன.*[20] *அங்கவீன உரிமைகள் சட்டமூலத்தை நிறைவேற்றியிருந்தால் இலகுவில் பாதிப்புறக்கூடிய சமூகத்தின் காலம்கடந்த சட்டப் பாதுகாப்புகளை புதுப்பித்திருக்க முடியும். எவ்வாறாயினும் கடமைப்பொறுப்புத் திட்டத்தில் ஏற்கனவே காணப்பட்ட தடங்கல்களை நிவர்த்தி செய்வது தொடர்பான அம்சங்கள் அடங்கியிருக்கவில்லை.* |
| ***திறந்த அரசாங்கத்தை ஏற்படுத்தியிருந்ததா?***<br><br>***மாற்றத்தை ஏற்படுத்தவில்லை*** | *2021 ஆம் ஆண்டளவில் பாராளுமன்றத்தினால் அங்கவீன உரிமைகள் சட்டமூலம் நிறைவேற்றப்படவில்லை. மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய சம்மேளனம் (NCPD), மாற்றுத்திறனாளிகள் சங்கத்தின் இணை முன்னணி (DOJF) மற்றும் இதர அமைப்புகளின் பிரதிநிதிகளால் சட்டமூலத்துக்கான திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. பொருளடக்கத்தைப் பொறுத்தமட்டில் வரைவுக்குழுவினால் பாலின சமத்துவம் எய்தப்படவில்லை என்பதுடன், பிரதிநிதிகள் பெரும்பாலும் கொழும்பை தளமாகக் கொண்டமைந்திருந்தனர். இந்த திருத்தம் சிங்கள மொழியில் காணப்பட்டதுடன், குழுவில் காணப்பட்ட ஒரே தமிழ் பேசும் பிரதிநிதிக்காக ஆங்கில மொழியில் சாராம்சம் தயார்ப்படுத்தப்பட்டிருந்தது. சமூக நலன்புரி அமைச்சினால் நியமிக்கப்பட்ட சட்டத்தரணியால் இந்த சட்டமூலம் 2021 ஆகஸ்ட் மாதம் மீள வரையப்பட்ட போது, மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய சம்மேளனத்திடமிருந்து கடும் எதிர்ப்புக்கு முகங்கொடுக்க நேரிட்டது. இந்த சட்டத்தரணி குறித்த சட்டமூலத்தை நிறைவேற்றும் பொறுப்பை சமூக நலன்புரி அமைச்சரிடமிருந்து, அமைச்சின் செயலாளருக்கு மாற்றம் செய்ய முற்பட்ட போதிலும், அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை.*[21] *அதேவேளை, அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் தொடர்ச்சியாக ஒதுக்கம் காணப்பட்டதை திறனாய்வாளர்கள் சுட்டிக்காட்டியதுடன், ஜனாதிபதியின் கீழ் நடைமுறைப்படுத்தும் பொறுப்பை பேணுமாறும் வாதிட்டிருந்தனர்.*[22] *எதிர்காலத்தில், இந்த சட்ட மூலம் பொது ஆலோசனைகள் மற்றும் UNCPRD ஆக்கம் 33 இன் பிரகாரம் பொருத்தமான வகையில் நடைமுறைப்படுத்தல் மற்றும் கண்காணிப்பு செயன்முறைகளை மேற்கொள்வதனூடாக வலிமைப்படுத்தப்படக்கூடியதாக இருக்கும். மேலும், இந்த சட்ட மூலத்தின் சிக்கல் நிலையை கவனத்தில் கொண்டு, சட்ட ஆணைக்குழுவினால் இதை வடிவமைப்பது பொருத்தமானதாக அமையும்.*[23] |

| ***கடமைப்பொறுப்பு 12: பெண்களுக்கு எதிரான சகல விதமான வன்முறைகளையும் இல்லாமல் செய்வது தொடர்பான மாநாட்டின் தீர்மானங்கள் பற்றிய பூர்த்தி செய்யும் கண்காணிப்புகள்*** | |
|---|---|
| ***கடமைப் பொறுப்பின் இலக்கு*** | *2020 ஆம் ஆண்டளவில் பெண்களுக்கு எதிரான சகல விதமான பாகுபாட்டையும் இல்லாமல் செய்யும் மாநாட்டின் (CEDAW) தீர்மானங்களை நிவர்த்தி செய்யும் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தும் வகையில் இந்த கடமைப்பொறுப்பு அமைந்திருந்தது. அரச காணி பகிர்வு, தொழில் வழங்கலில் பாகுபாடின்மை, அரசியலில் பெண்களின் பங்கேற்பு போன்றன தொடர்பில் பாலின சமத்துவம் தொடர்பான முன்னைய செயற்திட்டத்திலிருந்து மூன்று கடமைப் பொறுப்புகளை இது முன்கொண்டு வந்திருந்தது. புதிய ஒற்றை தொழில் சட்டம், அரசியல் சட்டம் மற்றும் பெண்களை தலைமையாகக் கொண்ட குடும்பங்கள் சிவில் சமூகத்துடன் கலந்தாலோசனை தொடர்பான தேசிய திட்டம், கொள்கை வடிவமைப்புக்கு திட்டமிடலில் பங்கேற்கும் வாய்ப்பு போன்ற மைல்கற்கள் நிறுவப்பட்டிருந்தன. தகவலை பெற்றுக் கொள்வதை பொறுத்தமட்டில், இந்த கடமைப் பொறுப்பினூடாக, பாலின வகைப்படுத்தப்பட்ட சம்பளங்கள் மற்றும் பாலியல் துன்புறுத்தல் தொடர்பான ஒன்லைன் தரவுகளை வெளியிட எதிர்பார்க்கப்பட்டதுடன், பெண்களை தலைமையாகக் கொண்ட குடும்பங்கள் தொடர்பில் தேசிய திட்டமொன்றை வரைதல் மற்றும் பாராளுமன்ற பாலின* |

| | |
|---|---|
| | கோட்டா முறைமை ஆகியவற்றுக்கான ஆலோசனை அறிக்கையையும் தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது.<br><br>குறிப்பிடப்பட்டதைப் போன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பின், இலங்கையில் பாலின சமத்துவம் தொடர்பில் நிலவும் ஒவ்வொரு பிரச்சனைக்குரிய பிரிவுகளுக்குமான மைல்கற்களுக்கும் பெண்களுக்கான பொதுப் பங்குபற்றல் மாற்றியமைப்பு தாக்கத்தை இந்தக் கடமைப்பொறுப்பினூடாக எய்தக்கூடியதாக இருந்திருக்கும். உலகின் முதலாவது பெண் பிரதமரை இலங்கை தெரிவு செய்திருந்த போதிலும், பாராளுமன்றத்தில் பெண்களின் பங்கேற்பு என்பதில், 2019 ஆம் ஆண்டளவில், இலங்கை 190 நாடுகளில் 181 ஆம் இடத்தில் தரப்படுத்தப்பட்டிருந்தது.[24] மொத்த பாராளுமன்ற உறுப்பினர்களில் 5 சதவீதமானவர்கள் மாத்திரமே பெண்களாக அமைந்திருக்கும் நிலையில் (225 இல் 12), போதியளவு பெண்களின் பிரசன்னத்தை உறுதி செய்வதற்காக 2022 ஆம் ஆண்டளவில் பாலின கோட்டா முறைமை ஒன்றை அறிமுகம் செய்வதனூடாக, இதனை நிவர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும்.[25] ஊழியர் செயலணியைப் பொறுத்தமட்டில், 2018 ஆம் ஆண்டில் உலகின் 20ஆவது மாபெரும் பாலின இடைவெளியை இலங்கை கொண்டிருந்தது. 2019 ஆம் ஆண்டளவில், தேசிய பெண்கள் ஊழியர் செயலணி பங்கேற்பு வீதம் 34% ஆக காணப்பட்டது,[26] இந்தப் பெறுமதி சுமார் இரு தசாப்த காலப்பகுதிக்கு மேலாக 30-35% ஆக அமைந்திருந்தது.[27] செயற்திட்டத்தை முன்னெடுக்கையில், இலங்கையின் கால் பங்குக்கு அதிகமான குடும்பங்கள் பெண் தலைமைத்துவத்தைக் கொண்டிருந்தன. இவர்களில் பெருமளவானோர் தொழில் அனுகூலங்களை அல்லது போதியளவு சமூகப் பாதுகாப்பு பொறிமுறைகளைப் பெறத் தவறியிருந்தனர். 2017 ஆம் ஆண்டில் பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்கான தேசிய செயற்திட்டமொன்றை தீட்டுவதற்கு முன்னாள் பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது.[28] காணி அபிவிருத்தி விதிமுறைகளில் மேற்கொள்ள எதிர்பார்க்கப்பட்ட திருத்தங்களைப் பொறுத்தமட்டில், CEDAW இன் இறுதி கண்காணிப்புகளில் 2017 ஆம் ஆண்டின், பாகுபாடான ஒதுக்கங்களை மீளப் பெறுவது, இணை உரிமையாண்மை மற்றும் தலைமுறையுரிமை போன்றன சட்ட வரைவு திணைக்களத்தில் காணப்பட்டதுடன், அதன் முன்னேற்றங்கள் தடைப்பட்டுள்ளன.[29] |
| **திறந்த அரசாங்கத்தை ஏற்படுத்தியிருந்ததா?**<br><br>**மாற்றத்தை ஏற்படுத்தவில்லை** | 2021 ஜுன் மாதமளவில், பெண்களை தலைமத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்கான தேசிய செயற்திட்டம் இறுதியாக்கப்பட்டிருக்கவில்லை. கடந்த இரு தசாப்த காலப்பகுதிகளில் காணப்பட்ட முன்னைய அரசாங்கங்களைப் போலன்றி, தற்போதைய அரசாங்கத்தில் பெண்கள் விவகாரம் தொடர்பில் அமைச்சரவையில் போதியளவு அர்ப்பணிப்பு காணப்படாததன் காரணத்தினால் வடிவமைப்பு செயன்முறை மந்தமடைந்திருந்தது. பெண்கள் விவகாரங்கள் பிரிவு, இரண்டாம் நிலை இராஜாங்க அமைச்சில் பேணப்பட்டிருந்ததுடன், சிறுவர் விருத்தி, முன்பள்ளிகள், ஆரம்பக் கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு மற்றும் கல்விச் சேவைகள் போன்றவற்றுடன் ஒன்றிணைக்கப்பட்டிருந்தது.[30] வரைபிலிருந்த தேசிய செயற்திட்டம் தொடர்பில், நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்ட சிவில் சமூக நிறுவனமான (CSO) ஆன யெஹெலிய மையம் அறிந்திருக்கவில்லை.[31]<br><br>நடைமுறைப்படுத்தும் காலப்பகுதியில், பெண்கள் மற்றும் காணி உரிமைகள் நிறுவனத்தினால் இரு தசாப்த காலமாக முன்னெடுக்கப்பட்டு வந்த காணி சமத்துவம் மற்றும் தலைமுறையுரிமை தொடர்பான விழிப்புணர்வுத் திட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டிருந்தது. 2021 டிசம்பர் மாதம் புதிய காணி அபிவிருத்தி அவசர திருத்தச் சட்டம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. இது நிறைவேற்றப்பட்டால், "பிள்ளைகள்" மற்றும் "பேரப் பிள்ளைகள்" எனும் சொற்பதத்தைப் பின்பற்றி அரச காணிப் உரிமைப் பத்திரங்களில் பாலின-நடுநிலைத்தன்மையை பொறுப்புரிமை ஒப்படைப்பு செய்வதாக அமைந்திருக்கும். எவ்வாறாயினும், இந்தத் திருத்தச் சட்டத்துக்கு சில பெண்கள் உரிமைகள் செயற்பாட்டாளர்களின் எதிர்ப்பும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.[32]<br><br>கடமைப்பொறுப்பின் எஞ்சியிருக்கும் உள்ளம்சங்களைப் பொறுத்தமட்டில், சமத்துவமான கொடுப்பனவு ஒதுக்கீடு தொடர்பில் எந்தவொரு தொழில் சட்டமூலமும் உள்ளடக்கப்படவில்லை. அரசாங்க அமைச்சுகளினுள் பாலியல் துன்புறுத்தல் கழகங்கள் நிறுவப்படவில்லை. யெஹெலிய மையத்தினால், அரசியலில் பெண்களின் பங்கேற்பை ஊக்குவிக்கும் செயற்பாடுகள் |

| | |
|---|---|
| | முன்னெடுக்கப்பட்டிருந்தன,[33] ஆனாலும் இலங்கையின் பாராளுமன்றத்தில் பாலின சமத்துவ கோட்டா முறைமை எதுவும் அறிமுகப்படுத்தப்படவில்லை.[34] |

---

1 உறுதியான கடமைப்பொறுப்புகள் உறுதி செய்யத்தக்க, பொருத்தமான மற்றும் மாற்றியமைக்கத்தக்க உள்ளம்சத்தைக் கொண்டிருப்பதாக மதிப்பாய்வு செய்யப்பட்டிருந்தால் அவற்றை **"குறிப்பிடத்தக்க கடமைப்பொறுப்புகள்"** என சுயாதீன அறிக்கையிடல் பொறிமுறை (IRM) இனங்கண்டிருந்தது. குறித்த மதிப்பாய்வில் எந்தவொரு கடமைப்பொறுப்பும் இந்த தேவைப்பாட்டை நிவர்த்தி செய்திருக்காவிடின், குறிப்பிடத்தக்களவு தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்பைக் கொண்டிருந்த கடமைப்பொறுப்புகளிலிருந்து குறிப்பிடத்தக்க கடமைப்பொறுப்புகளை சுயாதீன அறிக்கையிடல் பொறிமுறை (IRM) தெரிவு செய்திருந்தது.

2 *"இலங்கை இறுதித் தவணை அறிக்கை 2016 – 2018"*, திறந்த அரசாங்க பங்குடமை, 29 ஜுலை 2019 https://www.opengovpartnership.org/documents/sri-lanka-end-of-term-report-2016-2018/

3 1975 ஆம் ஆண்டின் சொத்துகள் மற்றும் கடப்பாடுகள் சட்ட, இல. *1.* (01 டிசம்பர், 2005 வரை திருத்தங்களை உள்வாங்கியிருந்தமை), https://www.ciaboc.gov.lk/images/pdf/acts/Declaration_of_Assets_and_Liabilities.pdf

4 பலாவு மற்றும் ப்ருனெய் தருஸ்சலாம், *"இலங்கை நாட்டின் மீளாய்வு அறிக்கை"* ("Country Review Report of Sri Lanka"), போதைப்பொருட்கள் மற்றும் குற்றச் செயல்களுக்கான ஐக்கிய நாடுகள் அலுவலகம், https://bit.ly/3I9sjVZ.

5 திறந்த அரசாங்க பங்குடமை இலங்கை தேசிய செயற்திட்டம் *2019 – 2021* ("Open Government Partnership Sri Lanka National Action Plan 2019–2021"), திறந்த அரசாங்க பங்குடமை, 3 ஏப்ரல் 2019, https://www.opengovpartnership.org/documents/sri-lanka-action-plan-2019-2021/ (அணுகப்பட்டது 12 நவம்பர் 2021).

6 "இலங்கையில் வருமானம், சொத்துகள் மற்றும் ஈடுபாடு தொடர்பில் வெளிச்சத்துக்கு கொண்டு வரல்" ("Shedding light on incomes, assets and interests in Sri Lanka"), ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் ஸ்ரீ லங்கா, 30 ஆகஸ்ட் 2019, https://voices.transparency.org/shedding-light-on-incomes-assets-and-interests-in-sri-lanka-39d0dae4df7a (அணுகப்பட்டது 4 ஜனவரி 2022).

7 அசோக ஒபேசேகர, "பாராளுமன்ற மந்திரிகள் சொத்துகள்: RTI இனால் விளையாட்டின் விதிமுறைகள் மாற்றப்படுகின்றனவா?" ("MP Assets: RTI Changing the Rules of the Game?"), ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் ஸ்ரீ லங்கா, 3 பெப்ரவரி 2017, https://www.tisrilanka.org/mp-assets-rti-changing-the-rules-of-the-game/.

8 சத்துஷிகா விஜேசிங்க மற்றும் சங்கிதா குணரட்ன, ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் ஸ்ரீ லங்கா, IRM ஆய்வாளருடனான நேர்காணல், 15 நவம்பர் 2021.

9 உவின் லுகொட, "சொத்துகள் மற்றும் கடப்பாடுகள் பிரகடனங்கள், வெளிப்படைத்தன்மைக்கான போராட்டம் தொடர்கின்றது" ("Assets and liabilities declarations, the battle for transparency continues,") த மோர்னிங் பத்திரிகை (14 பெப்ரவரி 2021), https://www.themorning.lk/assets-and-liabilities-declarations-the-battle-for-transparency-continues/ (அணுகப்பட்டது நவம்பர் 5, 2021).

10 "இலங்கை இறுதித் தவணை அறிக்கை *2016 – 2018*", திறந்த அரசாங்க பங்குடமை, 29 ஜுலை 2019 https://www.opengovpartnership.org/documents/sri-lanka-end-of-term-report-2016-2018/.

11 "இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் அரசியலமைப்பு", பாராளுமன்ற செயலகம், 2021, https://www.parliament.lk/files/pdf/constitution.pdf.

12 "த RTI தரப்படுத்தல்," தகவல் தரப்படுத்தலுக்கான சர்வதேச உரிமை, https://www.rti-rating.org/ (அணுகப்பட்டது 4 ஜனவரி 2022)

13 "இலங்கை இறுதித் தவணை அறிக்கை *2016 – 2018*", திறந்த அரசாங்க பங்குடமை, 29 ஜுலை 2019 https://www.opengovpartnership.org/documents/sri-lanka-end-of-term-report-2016-2018/.

14 "இலங்கையில் RTI சட்டத்தின் கீழ் ஒன்லைனில் தகவல் வெளிப்படுத்தல்" ("Online Proactive Disclosure Under the RTI Act in Sri Lanka"), Verité Research, டிசம்பர் 2017, https://www.veriteresearch.org/publication/online-proactive-disclosure-under-the-rti-act-in-sri-lanka/.

15 சத்துஷிகா விஜேசிங்க மற்றும் சங்கிதா குணரட்ன, ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் ஸ்ரீ லங்கா, IRM ஆய்வாளருடனான நேர்காணல், 15 நவம்பர் 2021.

16 "தெற்காசிய தகவல் அறியும் உரிமை சட்டங்கள் சிறந்தவை ஆனாலும் அவற்றின் வினைத்திறனான பயன்பாடு தொடர்பில் கேள்விகள் காணப்படுகின்றன" ("South Asia RTI laws are good but questions over effective use,") *economynext* (27 ஒக்டோபர் 2021), https://economynext.com/south-asia-rti-laws-are-good-but-questions-over-effective-use-87338/ (அணுகப்பட்டது 11 நவம்பர் 2021).

17 பத்மினி மென்டிஸ் மற்றும் பினேந்திரி பெரேரா, "சட்ட வரைஞர்கள், நிர்வாகத்தினர் மற்றும் இதர தீர்மானங்களை மேற்கொள்வோருக்கான அங்கவீன கொள்கைச் சுருக்கம்" ("Disability Policy Brief for Law Makers, Administrators and other Decision Makers"), இனம்சார் கற்கைகளுக்கான சர்வதேச நிலையம் (2019), http://ices.lk/wp-content/uploads/2019/11/Disability-Policy-Brief-ENGLISH.pdf (அணுகப்பட்டது 3 டிசம்பர் 2021).

18 "ஐ.நா. சர்வதேச காலாந்தர மீளாய்வு – இலங்கை *2017* ("UN Universal Periodic Review - Sri Lanka 2017"), மாற்றுத்திறனாளிகள் அமைப்புகளின் இணைந்த முன்னணி, மார்ச் 2017, https://bit.ly/3CIDpAa.

19 "ஐ.நா. சர்வதேச காலாந்தர மீளாய்வு – இலங்கை *2017* ("UN Universal Periodic Review - Sri Lanka 2017"), மாற்றுத்திறனாளிகள் அமைப்புகளின் இணைந்த முன்னணி, மார்ச் 2017, https://bit.ly/3CIDpAa.

20 "இலங்கையில் மாற்றுத்திறன் உரிமைகள் தொடர்பில் புதிய சட்டங்களை இயற்றுவது" ("Enacting a New Law on Disability Rights in Sri Lanka"), இனம்சார் கற்கைகளுக்கான சர்வதேச நிலையம், http://ices.lk/projects/enacting-a-new-law-on-disability-rights-in-sri-lanka/.

21 பத்மினி மென்டிஸ் (மாற்றுத்திறன் மற்றும் புனருத்தாரண ஆலோசகர்), IRM உடனான தொடர்பாடலின் போது, 10 டிசம்பர் 2021.

[22] பத்மினி மென்டிஸ், "மாற்றுத்திறன் உரிமைகள் ஒரு அரசியல் பிரச்சனை" ("Disability rights a political issue,") த ஐலன்ட் (10 ஆகஸ்ட் 2021), https://island.lk/disability-rights-a-political-issue/ (அணுகப்பட்டது 2 டிசம்பர் 2021).
[23] பத்மினி மென்டிஸ் (மாற்றுத்திறன் மற்றும் புனருத்தாரண ஆலோசகர்), IRM உடனான தொடர்பாடலின் போது, 10 டிசம்பர் 2021.
[24] "தேசிய பாராளுமன்றங்களில் பெண்களின் மாதாந்த தரப்படுத்தல்" ("Monthly ranking of women in national parliaments"), பாராளுமன்றங்களுக்கிடையிலான ஒன்றியம், https://data.ipu.org/women-ranking?month=8&year=2019 (அணுகப்பட்டது 7 ஜனவரி 2022).
[25] "பாலின ஒதுக்கீடு தரவுமையம்" ("GENDER QUOTAS DATABASE,") சர்வதேச *IDEA*, பாராளுமன்றங்களுக்கிடையிலான ஒன்றியம், மற்றும் Stockholm பல்கலைக்கழகம், https://www.idea.int/data-tools/data/gender-quotas/country-view/172/35 (அணுகப்பட்டது 5 நவம்பர் 2021).
[26] "ஊழியர் பங்கேற்பு வீதம், பெண்கள் (15வயதுக்கு மேற்பட்ட பெண் சனத்தொகை %) (மாதிரியிலமைந்த ILO மதிப்பீடு) – இலங்கை," உலக வங்கி (15 ஜூன் 2021), https://data.worldbank.org/indicator/SL.TLF.CACT.FE.ZS?locations=LK (அணுகப்பட்டது 6 ஜனவரி 2022).
[27] "இலங்கையின் பணியாளர்களில் பெண்களின் பங்கேற்பை பாதிக்கும் காரணிகள்" ("Factors affecting women's labour force participation in Sri Lanka,") சர்வதேச ஊழியர் ஸ்தாபனம் (2016), https://www.ilo.org/wcmsp5/groups/public/---asia/---ro-bangkok/---ilo-colombo/documents/publication/wcms_551675.pdf (அணுகப்பட்டது 6 ஜனவரி 2022).
[28] லிஹினி ரத்வத்த, 'கொவிட்-19 காரணமாக இலங்கையின் பெண் குடும்பத்தலைமையாக கொண்ட குடும்பங்கள் பற்றிய இடவொளி" ("Spotlight on Sri Lanka's Women-Headed Households Affected by COVID-19,") த டிப்ளோமட் (4 ஜூன் 2021), https://thediplomat.com/2021/06/spotlight-on-sri-lankas-women-headed-households-affected-by-covid-19/ (அணுகப்பட்டது 11 நவம்பர் 2021).
[29] "இலங்கையின் 8 ஆவது பருவகால அறிக்கையின் இறுதிக் கண்காணிப்புகள்" ("Concluding observations on the 8th periodic report of Sri Lanka: Committee on the Elimination of Discrimination against Women,") பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளை இல்லாமல் செய்வதற்கான ஐ.நா. செயற்குழு (9 மார்ச் 2017), https://digitallibrary.un.org/record/1286137?ln=en#record-files-collapse-header (அணுகப்பட்டது 3 ஜனவரி 2021).
[30] லிஹினி ரத்வத்த, 'கொவிட்-19 காரணமாக இலங்கையின் பெண் குடும்பத்தலைமையாக கொண்ட குடும்பங்கள் பற்றிய இடவொளி" ("Spotlight on Sri Lanka's Women-Headed Households Affected by COVID-19,") த டிப்ளோமட் (4 ஜூன் 2021), https://thediplomat.com/2021/06/spotlight-on-sri-lankas-women-headed-households-affected-by-covid-19/ (அணுகப்பட்டது 11 நவம்பர் 2021).
[31] நௌஷல்யா ராஜபக்ச (யெஹெலிய மையம்), IRM ஆய்வாளருடனான நேர்காணல், 13 டிசம்பர் 2021.
[32] சுவஸ்திகா அருள்லிங்கம், "காணி அபிவிருத்தி உரிமை திருத்தச் சட்டம்: காணியற்றவர்களாக பெண்கள் திகழ்வதற்கு பெண்களுக்கு சம உரிமை வழங்குவது" ("The Land Development Ordinance Amendment Bill: Granting women the equal right to become landless,") த மோர்னிங் (8 ஜனவரி 2022), https://www.themorning.lk/the-land-development-ordinance-amendment-bill-granting-women-the-equal-right-to-become-landless/ (அணுகப்பட்டது 15 பெப்ரவரி 2022).
[33] நௌஷல்யா ராஜபக்ச (யெஹெலிய மையம்), IRM ஆய்வாளருடனான நேர்காணல், 13 டிசம்பர் 2021.
[34] "பாலின ஒதுக்கீடு தரவுமையம்" ("GENDER QUOTAS DATABASE,") சர்வதேச *IDEA*, பாராளுமன்றங்களுக்கிடையிலான ஒன்றியம், மற்றும் Stockholm பல்கலைக்கழகம், https://www.idea.int/data-tools/data/gender-quotas/country-view/172/35 (அணுகப்பட்டது 5 நவம்பர் 2021).

## *2.3. கடமைப்பொறுப்புகளை நடைமுறைப்படுத்தல்*

*செயற்திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கடமைப்பொறுப்புகள் தொடர்பான வடிவமைப்பு மற்றும் பூர்த்தி பற்றிய மதிப்பாய்வை கீழே தரப்பட்டுள்ள அட்டவணை கொண்டுள்ளது.[1] செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் முன்னர், வடிவமைப்பு நிலையில் சரிபார்க்கத்தக்க நிலை, வெளிப்படையான அரசாங்கத்துக்கான பொருத்தப்பாடு மற்றும் தாக்க ஆற்றல் போன்றன மதிப்பாய்வு செய்யப்பட்டிருந்தன என்பதை கவனத்தில் கொள்ளவும்.*

| ***கடமைப்பொறுப்பு*** | ***மதிப்பாய்வு:*** |
|---|---|
| ***1. பொது அதிகார அமைப்புகளில்நேர்த்தியான அதிகாரிகள்*** | ***சரிபார்க்கத்தக்கது:*** *ஆம்*<br><br>***வெளிப்படையான அரசாங்கத்துக்கான பொருத்தப்பாடு:*** *ஆம்*<br><br>***தாக்க ஆற்றல்:*** *சிறிதளவு*<br><br>***பூர்த்தி:*** *ஆரம்பிக்கப்படவில்லை*<br><br>*நடைமுறைப்படுத்தும் காலப்பகுதியில் ஒன்றிணைப்பு அதிகாரிகள் நியமிக்கப்படவில்லை. முன்னைய செயற்திட்டத்தின் கீழ், இலங்கையில் இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு தொடர்பான தேசிய திட்டம் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. இதில் சகல பொது நிறுவனங்களும் ஒன்றிணைப்பு அதிகாரி ஒருவரை நியமிக்கக் கோரியிருந்தது. தமது நிறுவனத்தில் இடம்பெறும் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான குற்றங்களை கண்காணிப்பது, ஒன்றிணைப்பு தொடர்பான விதிமுறைகளுக்கமைய தமது ஊழியர்கள் இயங்குவதை உறுதி செய்வது, நிறுவனத்தின் சேவைகள் தொடர்பில் பொதுமக்கள் அறிந்து கொள்ளக்கூடிய கட்டமைப்பொன்றை உருவாக்குவது போன்றன இந்த அதிகாரியின் பொறுப்பாக அமைந்திருந்ததுடன், இந்தக் கடமைப்பொறுப்பினுள் உள்வாங்கப்பட்டிருந்தது. நிறுவனத்தினுள் செயலிலுள்ள நடைமுறையிலுள்ள செயன்முறைகளை/சுற்றறிக்கைகளை பரிசோதிப்பது மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் அவ்வாறான ஆவணங்களை தெளிவுபடுத்துவது போன்றனவும் அவர்களின் பொறுப்புகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன. மேலும், நிறுவனத்திலிருந்து பொது மக்களுக்கு சேவைகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பான வழிகாட்டல்களை அவசியமான வகையில் வழங்குவதற்கும் அவர்கள் பொறுப்பு வாய்ந்தவர்களாக இருப்பார்கள்.[2] முன்னைய அரசாங்கத்தினால் நிறுவப்பட்ட இலஞ்சம் மற்றும் மோசடி தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் குழுவுக்கு, ஒன்றிணைப்பு அதிகாரிகளை நியமிப்பதற்கான அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், தற்போதைய அரசாங்கத்தின் கீழ் நடைமுறைப்படுத்தல் நிறுத்தப்பட்டுள்ளது.[3]* |
| ***2. சொத்துக்கள் பிரகடன கட்டமைப்பு*** | ***சரிபார்க்கத்தக்கது:*** *ஆம்*<br><br>***வெளிப்படையான அரசாங்கத்துக்கான பொருத்தப்பாடு:*** *ஆம்*<br><br>***தாக்க ஆற்றல்:*** *நடுத்தரளவு*<br><br>***பூர்த்தி:*** *மட்டுப்படுத்தப்பட்டளவு*<br><br>*இந்த கடமைப்பொறுப்பு பற்றிய நடைமுறைப்படுத்தல் மற்றும் ஆரம்ப கட்ட பெறுபேறுகள் பற்றிய விவரங்களை பார்வையிட, 2.2 பிரிவைப் பார்க்கவும்.* |
| ***3. தகவல் அறியும் உரிமை*** | ***சரிபார்க்கத்தக்கது:*** *ஆம்*<br><br>***வெளிப்படையான அரசாங்கத்துக்கான பொருத்தப்பாடு:*** *ஆம்*<br><br>***தாக்க ஆற்றல்:*** *நடுத்தரளவு*<br><br>***பூர்த்தி:*** *மட்டுப்படுத்தப்பட்டளவு*<br><br>*இந்த கடமைப்பொறுப்பு பற்றிய நடைமுறைப்படுத்தல் மற்றும் ஆரம்ப கட்ட பெறுபேறுகள் பற்றிய விவரங்களை பார்வையிட, 2.2 பிரிவைப் பார்க்கவும்.* |

| | |
|---|---|
| ***4. சுகாதாரத் துறையில் குடிமக்களின் பங்கேற்பு*** | ***சரிபார்க்கத்தக்கது:*** *ஆம்*<br><br>***வெளிப்படையான அரசாங்கத்துக்கான பொருத்தப்பாடு:*** *ஆம்*<br><br>***தாக்க ஆற்றல்:*** *சிறிதளவு*<br><br>***பூர்த்தி:*** *ஆரம்பிக்கப்படவில்லை*<br><br>*பிரதான சிவில் சமூக பங்காளரான சர்வோதயவின் பிரகாரம், கொவிட்-19 தொற்றுப் பரவல் காரணமாக சுகாதாரத் துறையில் முன்னெடுக்கப்பட்டிருந்த சுகாதார கொள்கை முன்னுரிமைகளின் காரணமாக, அரசாங்கம் இந்த விடயம் தொடர்பில் போதியளவு கவனம் செலுத்தியிருக்காததன் காரணமாக, இந்தக் கடமைப்பொறுப்பின் கீழான செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை. சுகாதாரத் துறையின் மறுசீரமைப்பில் குடிமக்களின் ஈடுபாட்டை வலிமைப்படுத்துவது, முன்னைய செயற்திட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருந்த கொடிய சிறுநீரக நோயைக் கட்டுப்படுத்துவது தொடர்பான நடவடிக்கைத் திட்டம் மற்றும் மருந்துப் பொருட்கள் விநியோக நிர்வாகம் ஆகியவற்றை வலிமைப்படுத்தும் வகையில் இந்தக் கடமைப்பொறுப்பு அமைந்திருந்தது. சுகாதார தரவுகளைப் பெற்றுக் கொள்வதைப் பொறுத்தமட்டில், சுகாதார அமைச்சின் இணையத்தளத்தை மேம்படுத்துவதில் மிகவும் சொற்ப முன்னேற்றம் பதிவாகியிருந்ததுடன், உளவியல் சுகாதாரத்தை மேம்படுத்துவது அல்லது கொடிய சிறுநீரக நோய்க்கான உணவு அடிப்படையிலான ஆராய்ச்சி தொடர்பில் எவ்விதமான தொடர்பாடல் பிரச்சாரத் திட்டங்களும் முன்னெடுக்கப்படவில்லை.[4] நவம்பர் 2021 வரையில், மருந்துப் பொருட்கள் விநியோக நிர்வாக தகவல் கட்டமைப்பினுள், அடிப்படை மருத்துவ பராமரிப்பு அலகுகளை உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.[5]*<br><br>*சர்வோதயவை நியமப்படுத்துவது மற்றும் மக்களின் சுகாதார முன்னெடுப்பு போன்றவற்றினால் சுகாதாரக் கொள்கையில் பொது மக்களின் பங்கேற்பு எனும் கடப்பாடு இந்தப் கடமைப்பொறுப்பினால் பூர்த்தி செய்யப்படவில்லை. எவ்வாறாயினும், நடைமுறைப்படுத்தும் காலப்பகுதியில் இருசாராருக்கும் தேசிய சுகாதாரக் கொள்கையில் பங்கேற்பதற்கான சில வாய்ப்புகள் கிடைத்திருந்தன. குறிப்பாக, 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில், தேசிய மருந்துப் பொருட்கள் ஒழுங்குபடுத்தல் சட்டம் தொடர்பான நிறுவனத்தின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் காலப்பகுதிக்கு முன்னதாக தேசிய மருந்துப் பொருட்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் தவிசாளர் ஏற்றுக்கொண்டார். அதே ஆண்டில், சுகாதார கட்டமைப்பு தொடர்பான அவர்களின் பரிந்துரைகள் அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தின் திருத்தங்களுக்காக கவனத்தில் கொள்ளப்பட்ட போதிலும் – புதிய அரசாங்கம் அமைந்ததன் காரணமாக இந்த செயன்முறை கைவிடப்பட்டது. தொற்றுப் பரவல் காலப்பகுதியில், சர்வோதய மற்றும் மக்கள் சுகாதார முன்னெடுப்பின் பரிந்துரைகளை சுகாதார அமைச்சின் கொவிட்-19 செயற்திட்டத்தில் உள்வாங்கியிருந்தது. சுகாதாரத் துறையில் பொது மக்களின் பங்கேற்பின் முக்கியத்துவத்துக்கு கிடைத்த அங்கீகாரமாக சர்வோதய இந்த நடவடிக்கையை சுட்டிக்காட்டியிருந்தது.[6]*<br><br>*மக்கள் சுகாதார முன்னெடுப்பினை வலிமைப்படுத்துவதற்கான தேவை காணப்படுகின்றது. சுகாதாரத் துறையைச் சேர்ந்த சிவில் சமூக அமைப்புகளுடன் இணைந்து ஐ.நா.வினால் பரிந்துரைக்கப்பட்ட கொவிட்-19 சுகாதார ஒருங்கிணைப்பு கட்டமைப்பொன்றை அரசாங்கம் முன்னெடுப்பதையும் சர்வோதய பரிந்துரைத்திருந்தது. இதில் தற்போது சுகாதார அமைச்சு, உலக சுகாதார ஸ்தாபனம் மற்றும் சர்வோதய ஆகியன அடங்கியுள்ளன.[7]* |
| ***5. சிறுவர் துஷ்பிரயோகம்*** | ***சரிபார்க்கத்தக்கது:*** *ஆம்*<br><br>***வெளிப்படையான அரசாங்கத்துக்கான பொருத்தப்பாடு:*** *ஆம்*<br><br>***தாக்க ஆற்றல்:*** *சிறிதளவு* |

| | |
|---|---|
| | ***பூர்த்தி:*** *ஆரம்பிக்கப்படவில்லை*<br><br>*2021 பெப்ரவரி மாதத்தில், பாடசாலைகளில் போதை தடுப்பு நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பிப்பது தொடர்பான கலந்துரையாடல்களை பொது பாதுகாப்பு அமைச்சுடன் கல்வி அமைச்சு முன்னெடுத்திருந்தது.[8] பாடசாலைகள் மட்டத்தில் போதைப் பொருட்களுக்கு அடிமையாவது அதிகரித்து வரும் சூழலில்,[9] ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களை உள்ளடக்கி பாடசாலை மட்டத்தில் போதை தவிர்ப்பு குழுக்களை நிறுவுவதற்கு இந்தக் கடமைப்பொறுப்பினூடாக திட்டமிடப்பட்டிருந்தது. இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டமைக்கு அல்லது நடைமுறைப்படுத்தும் காலப்பகுதிக்கு முன்னர் காணப்பட்ட பாடசாலை மட்ட போதை ஒழிப்பு குழுக்களுடன் ஒப்பிடுகையில் இந்தத் திட்ட காலப்பகுதியில் இந்தக் குழுக்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டமைக்கு எவ்விதமான ஆதாரங்களும் இல்லை.* |
| ***6. GIC-1919, அரச இணையத்தளங்கள் மற்றும் திறந்த தரவுகள் கட்டமைப்புகள்*** | ***சரிபார்க்கத்தக்கது:*** *ஆம்*<br><br>***வெளிப்படையான அரசாங்கத்துக்கான பொருத்தப்பாடு:*** *ஆம்*<br><br>***தாக்க ஆற்றல்:*** *சிறிதளவு*<br><br>***பூர்த்தி:*** *ஆரம்பிக்கப்படவில்லை*<br><br>*அரசாங்க சேவைகளை பொது மக்களுக்காக பட்டியலிடப்படும் ஒன்லைன் கட்டமைப்பான அரசாங்கல் தகவல் நிலையத்தை (GIC – 1919), மேம்படுத்தும் வகையில் முன்னைய செயற்திட்டத்தின் முயற்சிகளை தொடரும் வகையில் இந்த கடமைப் பொறுப்பு அமைந்துள்ளது. GIC – 1919 இல் முன்னேற்றம் அல்லது அரசாங்க இணையத்தளங்கள் மற்றும் திறந்த தரவு கட்டமைப்புகள் போன்றவற்றில் முன்னேற்றங்களை எய்தியமைக்கு எவ்விதமான ஆதாரங்களும் இல்லை. 2021 நவம்பர் மாதமளவில், GIC இல் 288 அரசாங்க, தெரிவு செய்யப்பட்ட மற்றும் கூட்டாண்மை நிறுவனங்களை உள்வாங்கியிருந்தது[10] - ஆனாலும் 2013 இல், இந்தக் கட்டமைப்பில் ஏற்கனவே 291 நிறுவனங்கள் உள்ளடங்கியிருந்தன.[11] பார்வையிடல் திறன் உள்ளம்சங்களைப் பொறுத்தமட்டில், பாவனையாளர்களுக்கு எழுத்துருக்களின் அளவு மற்றும் நிறத்தை மாற்றியமைத்துக் கொள்ளக்கூடிய வசதியை GIC இணையத்தளம் வழங்கியிருந்தது. எவ்வாறாயினும், இணையத்தளத்தில் தற்காலிகமாக நிறுத்த முடியாத (pause) நகரும் உள்ளம்சங்கள் காணப்பட்டதுடன், பின்புல வர்ணங்களை மாற்றியமைக்கும் வசதியை கொண்டிருக்கவில்லை. GIC சேவைகள் தொடர்பில் குடிமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் GIC ஆய்வு அறிக்கைகள் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை.[12] 2021 நவம்பர் மாதமளவில் [www.data.gov.lk](http://www.data.gov.lk), எனும் இணையத்தளத்தில் 136 திறந்த தரவுகட்டமைப்புகள் பட்டியலிடப்பட்டிருந்ததுடன், அடிப்படை 300 தரவுக்கட்டமைப்புகள் இலக்கையும், ஒட்டுமொத்த இலக்கான 2000 தரவுக்கட்டமைப்புகள் என்பதையும் பூர்த்தி செய்திருக்கவில்லை. 2020 பெப்ரவரி மாதத்தில் இந்த இணையக்கட்டமைப்பு இறுதியாக மெருகேற்றப்பட்டிருந்தது[13] இதனூடாக, நடைமுறைப்படுத்தும் காலப்பகுதியில் இந்தக் கட்டமைப்பு பயன்படுத்தப்பட்டிருக்காத நிலையை வெளிப்படுத்தியிருந்தது. இறுதியாக, அரசாங்க இணையத்தளங்களின் வினைத்திறன் தொடர்பில் மதிப்பாய்வு அறிக்கை வெளியிடப்பட்டிருந்தமைக்கான எவ்விதமான ஆதாரங்களும் இல்லை.* |
| ***7. E-விவசாய கட்டமைப்பு*** | ***சரிபார்க்கத்தக்கது:*** *ஆம்*<br><br>***வெளிப்படையான அரசாங்கத்துக்கான பொருத்தப்பாடு:*** *ஆம்*<br><br>***தாக்க ஆற்றல்:*** *நடுத்தரளவு*<br><br>***பூர்த்தி:*** *மட்டுப்படுத்தப்பட்டளவு*<br><br>*மார்ச் 2021 இல், பெருந்தோட்டத்துறை அமைச்சு மற்றும் விவசாயத்துறை அமைச்சு ஆகியன இணைந்து செலாடா டெக் பிரைவட் லிமிடெட்டினால் Agro Bizz – Smart Agro ஒன்றிணைப்பு கட்டமைப்பை நிறுவுவது பற்றி அறிவித்திருந்தன. இலங்கை 2016-2020 e-விவசாய தந்திரோபாயத்தின் பிரகாரம் இந்தத் திட்டம்* |

| | |
|---|---|
| | *வடிவமைக்கப்பட்டிருந்தது. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் தகவலை அணுகலை ஒன்றிணைப்பது தொடர்பில் இது கவனம் செலுத்தியிருந்தது,[14] ஆனாலும் நடைமுறைப்படுத்தலில் நெருக்கடிகளை எதிர்கொண்டிருந்தது.[15] விவசாயிகள், பண்ணைகள், பயிர்கள், உரம், களைநாசினி, விதைகள், விற்பனையாளர்கள், உணவு பதப்படுத்துநர்கள், ஏற்றுமதியாளர்கள், மண், விவசாய நீர் விநியோகம் மற்றும் களை கட்டுப்பாடு போன்றவற்றை நிர்வகிப்பதற்காக இந்தக் கட்டமைப்பை பயன்படுத்த எதிர்பார்க்கப்பட்டது. பயிர் விளைச்சல், தேவையான உரம் மற்றும் விதை தேவைப்பாடு போன்றவற்றை எதிர்வுகூறும் திறனை இது கொண்டிருந்ததுடன், நிதி உதவியை நிர்வகிப்பது மற்றும் விவசாயிகளுக்கும் விற்பனையாளர்களுக்கும் இடையீட்டாளர்களின்றி நேரடியான தொடர்பை ஏற்படுத்தும் ஒன்லைன் வியாபார கட்டமைப்பை ஏற்படுத்துவதாகவும் அமைந்திருந்தது.[16] 2021 ஆம் ஆண்டின் இறுதியில், இந்தக் கட்டமைப்பு பொதுவில் அறிமுகம் செய்யப்படவில்லை. வாய்ப்புகளைப் பொறுத்தமட்டில், 2021 ஆம் ஆண்டில், மொத்த சனத்தொகையில் 67% ஆனவர்கள் மாத்திரம் மொபைல் தொலைபேசி பாவனையாளர்களாக திகழ்ந்ததுடன், 60% ஆனவர்கள் மாத்திரம் இணைய பாவனையாளர்களாக திகழ்ந்தனர்.[17]* |
| ***8. குறைந்த வருமானமீட்டும் வீடமைப்பு ஒதுக்கீடுகளில் மாற்றுத்திறன் படைத்தவர்களின் பங்கேற்பு*** | ***சரிபார்க்கத்தக்கது:*** *ஆம்*<br><br>***வெளிப்படையான அரசாங்கத்துக்கான பொருத்தப்பாடு:*** *ஆம்*<br><br>***தாக்க ஆற்றல்:*** *நடுத்தரளவு*<br><br>***பூர்த்தி:*** *மட்டுப்படுத்தப்பட்டளவு*<br><br>*மாற்றுத்திறன் படைத்தவர்களுக்கு வீடமைப்புநிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுப்பதற்கு வீடமைப்பு அமைச்சு அல்லது இதர அரசாங்க அமைப்புகளினால் எவ்விதமான நிகழ்ச்சிகளையும் முன்னெடுத்திருந்தமைக்கான ஆதாரங்களும் இல்லை என செயற்பாட்டாளர்களின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.[18] 2020 ஆம் ஆண்டின் நிறைவில், 3200 குறைந்த வருமானமீட்டும் மாற்றுத்திறன் படைத்தவர்களால் பயன்படுத்தக்கூடிய வீடமைப்புத் திட்டத்தை உருவாக்குவதையும், வீடமைப்பு கொள்கை வடிவமைப்பில் மாற்றுத்திறனாளிகளை உள்வாங்குவது மற்றும் கண்காணிப்பது தொடர்பான தேசிய வீடமைப்பு செயற்படுத்தல் குழு ஒன்றை நிறுவுவதற்கும் இந்த கடமைப்பொறுப்பு எதிர்பார்த்திருந்தது. 2019 இல், மாற்றுத்திறன் படைத்தவர்களில் 14% ஆனவர்கள் மாத்திரமே வீட்டு உரிமையாளர்களாக திகழ்ந்ததுடன், 70% ஆனவர்கள் தொழில் வாய்ப்பின்றி காணப்பட்டனர்.[19] இதனூடாக போதியளவு அணுகக்கூடிய வீடமைப்புக்கான கண்டிப்பான தேவை நிலவியமை புலனாகியிருந்தது. எதிர்காலத்தில், மாற்றுத்திறன் படைத்தவர்களுக்கு வீடமைப்புத் திட்டம் அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமாயின், பாடசாலைகள், வைத்தியசாலைகள், போக்குவரத்து மற்றும் பொது வசதிகளை அண்மித்து அவற்றை நிறுவுவதில் கவனம் செலுத்துமாறு மனித உரிமைகள் நிறுவனம் ஆலோசனை வழங்கியுள்ளது. வீடமைப்பு தொழில் சிகிச்சைகளையும் இந்த நிகழ்ச்சில் ஈடுபடுத்துமாறு குறித்த நிறுவனம் பரிந்துரைத்துள்ளது.[20]* |
| ***9. அங்கவீனமுற்றவர்களுக்கான உரிமைகள் சட்டமூலம்*** | ***சரிபார்க்கத்தக்கது:*** *ஆம்*<br><br>***வெளிப்படையான அரசாங்கத்துக்கான பொருத்தப்பாடு:*** *ஆம்*<br><br>***தாக்க ஆற்றல்:*** *நடுத்தரளவு*<br><br>***பூர்த்தி:*** *மட்டுப்படுத்தப்பட்டளவு*<br><br>*இந்த கடமைப்பொறுப்பு பற்றிய நடைமுறைப்படுத்தல் மற்றும் ஆரம்ப கட்ட பெறுபேறுகள் பற்றிய விவரங்களை பார்வையிட, 2.2 பிரிவைப் பார்க்கவும்.* |
| ***10. பங்கேற்பு இடர் முகாமைத்துவம்*** | ***சரிபார்க்கத்தக்கது:*** *ஆம்*<br><br>***வெளிப்படையான அரசாங்கத்துக்கான பொருத்தப்பாடு:*** *ஆம்*<br><br>***தாக்க ஆற்றல்:*** *நடுத்தரளவு* |

| | |
|---|---|
| | ***பூர்த்தி:*** *ஆரம்பிக்கப்படவில்லை*<br><br>*நடைமுறைப்படுத்தும் காலப்பகுதியில் இந்த கடமைப்பொறுப்பின் முன்னேற்றம் தொடர்பில் எவ்விதமான ஆதாரங்களும் கிடைக்கவில்லை. இந்த கடமைப் பொறுப்பினூடாக பரிபூரண இடர் தயார்நிலை நிகழ்ச்சித் திட்டமொன்றை தயாரிப்பதுடன், இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட பங்காளர்கள் மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சு ஆகியவற்றினால் ஏற்கனவே காணப்படும் இடர் முகாமைத்துவ வழிகாட்டல்களை மீளாய்வு செய்து மீளமைப்பதனூடாக பொது மக்களுக்கு முன்கூட்டியே எச்சரிக்கையூட்டும் முறைமையை அறிமுகம் செய்வதில் கவனம் செலுத்தியிருந்தது. 2006 மற்றும் 2016 ஆகிய காலப்பகுதியினுள் இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும் நிகழ்தகவு 22 மடங்கினால் அதிகரித்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சு குறிப்பிட்டுள்ளது.[21] முன்கூட்டியே எச்சரிக்கும் கட்டமைப்பொன்றின் வெற்றிகரத் தன்மை என்பது, குறித்த தகவல்கள் மும் மொழிகளிலும் கிடைப்பதில் தங்கியுள்ளதுடன், கையடக்க தொலைபேசிகளை கொண்டிராத மக்கள் அல்லது டிஜிட்டல் முறைமையினூடாக இணைக்கப்படாதவர்களுக்கும் குறித்த எச்சரிக்கை வழங்கப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அனைவருக்கும் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு வழிகோலும் இதர தொடர்பாடல் வழிமுறைகளும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.* |
| ***11. தேசிய சூழல் கொள்கை மற்றும் சட்டம்*** | ***சரிபார்க்கத்தக்கது:*** *ஆம்*<br><br>***வெளிப்படையான அரசாங்கத்துக்கான பொருத்தப்பாடு:*** *ஆம்*<br><br>***தாக்க ஆற்றல்:*** *சிறிதளவு*<br><br>***பூர்த்தி:*** *மட்டுப்படுத்தப்பட்டளவு*<br><br>*புதிய சூழல் கொள்கை மற்றும் சட்டமூலத்தில் காலநிலை மாற்ற பின்பற்றல் தொடர்பில் பங்காளர்களின் பரிந்துரைகளைப் பெற்றுக் கொள்வதை இலக்காகக் கொண்டு, முன்னைய செயற்திட்டத்திலிருந்து முன்கொண்டு வரப்பட்டதாக இந்த கடமைப்பொறுப்பு அமைந்துள்ளது. 1980 ஆம் ஆண்டில் இந்த சட்டம் முதலில் நிறைவேற்றப்பட்டதுடன், 1988, 2000, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் திருத்தம் செய்யப்பட்டிருந்தது.[22] நடைமுறைப்படுத்தும் காலப்பகுதியின் நிறைவின் பின்னர், புதிய தேசிய சூழல் கொள்கை வரையப்பட்டு, 2021 செப்டெம்பர் மாதம் பொது மக்களின் கருத்துக்களைப் பெறுவதற்காக முன்வைக்கப்பட்டது.[23] பொது மக்களின் கருத்துக்களை வழங்கும் காலப்பகுதியில், SYLCAN Trust இனால் இந்தக் கொள்கை தொடர்பில், நிபுணர்களின் கருத்துகளைப் பெற்றுக் கொள்வதற்காக, திறந்த மெய்நிகர் கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.[24]* |
| ***12. பெண்களுக்கு எதிரான சகல விதமான வன்முறைகளையும் இல்லாமல் செய்வது தொடர்பான மாநாட்டு இறுதித் தீர்மானங்களை பூர்த்தி செய்தல்*** | ***சரிபார்க்கத்தக்கது:*** *ஆம்*<br><br>***வெளிப்படையான அரசாங்கத்துக்கான பொருத்தப்பாடு:*** *ஆம்*<br><br>***தாக்க ஆற்றல்:*** *மாற்றியமைக்கத்தக்கது*<br><br>***பூர்த்தி:*** *மட்டுப்படுத்தப்பட்டளவு*<br><br>*இந்த கடமைப்பொறுப்பு பற்றிய நடைமுறைப்படுத்தல் மற்றும் ஆரம்ப கட்ட பெறுபேறுகள் பற்றிய விவரங்களை பார்வையிட, 2.2 பிரிவைப் பார்க்கவும்.* |
| ***13. பிரதேச சபைகளில் குடிமக்களின் பங்கேற்பு*** | ***சரிபார்க்கத்தக்கது:*** *ஆம்*<br><br>***வெளிப்படையான அரசாங்கத்துக்கான பொருத்தப்பாடு:*** *ஆம்*<br><br>***தாக்க ஆற்றல்:*** *சிறிதளவு*<br><br>***பூர்த்தி:*** *குறிப்பிடத்தக்களவு*<br><br>*இந்த கடமைப் பொறுப்பின் கீழ், சீதாவக்கை, மில்லானிய மற்றும் கம்பஹா ஆகிய மேல் மாகாணத்தின் மூன்று பிரதேச சபைகளில் முதற்கட்டமாக குடிமக்களின் பங்கேற்பு அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. இலங்கையின் 274 பிரதேச சபைகளும்,* |

| | |
|---|---|
| | *உள்ளூராட்சி மன்றங்களின் அங்கமாக அமைந்திருப்பதுடன், சமூகத்துடன் நெருக்கமானதாக உள்ளது. இந்த முதற்கட்ட அமர்வுகளில் பொதுமக்களும் பங்கேற்று, சபையின் வரவு செலவுத் திட்டங்களுக்கு பிரேரணைகளை வழங்கியிருந்ததுடன், தகவல் அறியும் உரிமை விண்ணப்பங்களையும் சமர்ப்பத்திருந்ததுடன், சபையின் சந்திப்புகளின் போது கண்காணிப்பாளர்களாக இயங்கியிருந்தனர். ஆலோசனை குழுக்களின் அங்கத்தவர்களாகவும் இயங்கியிருந்தனர். இந்த முதற்கட்ட சபைகளுக்கு அப்பால் பொது மக்களின் பங்குபற்றலை அதிகரிக்கச் செய்யும் வகையில், USAID மற்றும் IDEA ஆகியவற்றின் ஆதரவுடன், வடமேல் மாகாணத்தின் மூன்று பிரதேச சபைகளான கருவலகஸ்வெவ, கொபைகனே மற்றும் பிங்கிரிய ஆகியவற்றிலும் பின்பற்றப்பட்டது. மேலும், மேல் மாகாண சபையின் அறிவுறுத்தலுக்கமைய, மேல் மாகாணத்தின் பெருமளவான உள்ளூராட்சி மன்றங்களில், பங்கேற்புடனான வரவு செலவுத்திட்ட வரைபு, தொகுதிவாரியான பிரேரணைகளை நிறைவேற்றுவதில் பொது மக்களின் பங்குபற்றல் பின்பற்றப்படுகின்றது. மாகாண மட்டத்தில் பிரஜைகள் மண்டலங்களுக்கு வலுவூட்டும் வகையில், நடைமுறைப்படுத்தும் காலப்பகுதியில் சட்டமூலமொன்று வரையப்பட்டிருந்த போதிலும், தெரிவு செய்யப்பட்ட மாகாண சபை காணப்படாமையால் அது நிறைவேற்றப்படவில்லை.[25] உள்ளூராட்சி மன்றங்களில் பொது மக்களின் பங்கேற்பை விரிவாக்கம் செய்வதற்கு தொடர்ச்சியான முயற்சிகளுக்கான தேவை காணப்படுவதுடன், சேவை விநியோகம் தொடர்பில் குடிமக்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்கான பொறிமுறைகளை மீளமைப்பது தொடர்பிலும் திட்டங்கள் காணப்படுகின்றன.* |
| ***14. பயணிகளின் கருத்துக்கமைய பொதுப் பேருந்து போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தல்*** | ***சரிபார்க்கத்தக்கது:*** *ஆம்*<br><br>***வெளிப்படையான அரசாங்கத்துக்கான பொருத்தப்பாடு:*** *ஆம்*<br><br>***தாக்க ஆற்றல்:*** *சிறிதளவு*<br><br>***பூர்த்தி:*** *குறிப்பிடத்தக்களவு*<br><br>*2020 மே மாதத்தில், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் 2000 பயணிகளை இலக்கு வைத்து பயணிகள் கேள்விகள் மற்றும் தேவைகளை அறியும் கருத்துக் கணிப்பொன்றை ஆரம்பித்திருந்தது.[26] இந்த கருத்துக்கணிப்பின் பெறுபேறுகள் பொது மக்களுக்கு வெளியிடப்படவில்லை. இந்த அறிக்கை வெளியிடப்படும் போது, ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் பேருந்து நேர அட்டவணை, வழித்தடம் மற்றும் கட்டணங்கள் போன்றன தகவல் பட்டியலிடப்பட்டுள்ளன, ஒன்லைனில் பேருந்து ஆசன முற்பதிவு மற்றும் மூன்று நாட்களுக்குள் பதில் வழங்கும் உத்தியோகபூர்வ உறுதியளிப்பைக் கொண்ட முறைப்பாடுகளை பதிவு செய்யும் கட்டமைப்பு போன்றவற்றை வழங்குகின்றது.[27] முறைப்பாடுகள் கட்டமைப்பின் பாவனையாளர் அனுபவம் தொடர்பான தகவல்கள் பொதுவில் கிடைக்கவில்லை.*<br><br>*போக்குவரத்து துறையை மீளமைப்பது தொடர்பான எதிர்கால முயற்சிகளினூடாக, பயணிகள் தேவைகள் மற்றும் கட்டமைப்பு மாற்றம் போன்றவற்றில் அனுகூலத்தை ஏற்படுத்தும். பொது மக்களின் கருத்துக்களைக் கவனத்தில் கொண்டு, போக்குவரத்து சேவைகள் தொடர்பில் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு ஒற்றை ஆளுகை கட்டமைப்பொன்றை துறை நியமிக்கலாம்.* |
| ***15. சிறுவர் உரிமைகள் தொடர்பான ஐ.நா. மாநாட்டு இறுதித் தீர்மானங்களை பூர்த்தி செய்தல்*** | ***சரிபார்க்கத்தக்கது:*** *இல்லை*<br><br>***வெளிப்படையான அரசாங்கத்துக்கான பொருத்தப்பாடு:*** *இல்லை*<br><br>***தாக்க ஆற்றல்:*** *சிறியளவு*<br><br>***பூர்த்தி:*** *ஆரம்பிக்கப்படவில்லை*<br><br>*1991 ஆம் ஆண்டின் சிறுவர் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் மாநாட்டின் (UNCRC) போது[28] எய்தப்பட்ட இறுதித் தீர்மானங்களுக்கு இலங்கை உடன்பட்டிருந்த நிலையில், அவை திறந்த அரசாங்க பங்குடமை (OGP) பெறுமதிகளுக்கு பொருத்தமற்றதாக அமைந்திருந்தமை அல்லது முழுமையாக உறுதி செய்யக்கூடிய* |

| | |
|---|---|
| | மைல்கற்களை கொண்டிருக்காத நிலையில், அவற்றை நடைமுறைப்படுத்துவதை இலக்காகக் கொண்டு இந்த கடமைப்பொறுப்பு அமைந்திருந்தது. இந்த கடமைப்பொறுப்பு, சிறுவர் உரிமைகள் பாதுகாப்பு ஆணைக்குழுக்களுக்கு வலிமை சேர்ப்பதாக அமைந்திருந்தமை அல்லது காப்பகங்களில் சேர்க்கப்பட்ட சிறுவர்களை மீள ஒன்றிணைப்பது தொடர்பான ஆய்வுக்கு பதிலளிப்பதாக அமைந்திருந்தமை தொடர்பில் எந்தவிதமான ஆதாரங்களும் காணப்படவில்லை. புதிய கொள்கைகளுக்கமைய, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால், சிறுவர் பாதுகாப்பு தொடர்பான புதிய கொள்கை வடிவமைக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. வரைபு செயன்முறையில், சிறுவர் துஷ்பிரயோகங்களை தவிர்க்கும் நடவடிக்கைகள், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் சிறுவர் தண்டனைகள் போன்றவற்றை தவிர்ப்பது பற்றிய ஆலோசனைகளை பெறும் நடவடிக்கைகள் அடங்கியிருந்தன. இந்த ஆலோசனை பெறலில், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு, UNICEF, சர்வோதய மற்றும் இதர சிவில் சமூக அமைப்புகள் போன்றன அடங்கியிருந்தன. எவ்வாறாயினும், சிறுவர் உரிமைகளை உறுதி செய்வதில் போதியளவு அரசியல் தலையீடின்மை காரணமாக இந்த நடவடிக்கையின் நகர்வு மிகவும் மந்தமடைந்திருந்தது. கொவிட்-19 தொற்றுப் பரவல் காரணமாக ஒன்லைன் சந்திப்புகளில் நிலவிய இடர்பாடுகள் மற்றும் அரசியல் தளம்பல் நிலைகள் போன்ற தடங்கல்களும் இதில் தாக்கம் செலுத்தியிருந்தன. மொத்தத்தில், சர்வோதயவின் பிரகாரம், தொற்றுப் பரவல் காரணமாக பாடசாலைகள் மூடப்பட்டிருந்தமை, சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளின் அதிகரிப்பு மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்களின் அதிகரிப்பு போன்றவற்றினால் சிறுவர் உரிமைகளை உறுதி செய்யும் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தும் பணிகள் மந்தமடைந்திருந்தன. குடிமக்களின் செயற்பாடு மற்றும் சிறுவர் உரிமைகளை உறுதி செய்வதில் அரசாங்கம் முன்னுரிமையளிப்பதை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளினூடாக இந்த கொள்கை பயன்பெறும்.[29] |

[1] **ஆசிரியர் குறிப்பு:** சுருக்கத்துக்காக கடமைப்பொறுப்புகளின் குறுகிய தலைப்புகள் மாற்றப்பட்டிருக்கலாம். கடமைப்பொறுப்புகள் தொடர்பான முழுமையான விவரங்களுக்கு, இலங்கையின் செயற்திட்ட அறிக்கையை பார்க்கவும்: "இலங்கை செயற்திட்டம் 2019-2021" ("Sri Lanka Action Plan 2019–2021"), திறந்த அரச பங்குடமை, 3 ஏப்ரல் 2019, https://www.opengovpartnership.org/documents/sri-lanka-action-plan-2019-2021/.

[2] "Integrity Handbook", ஊழல் அல்லது மோசடி தொடர்பான முறைப்பாடுகளை விசாரிப்பதற்கான ஆணைக்குழு, 2019, pp. 23–25, https://www.ciaboc.gov.lk/images/nap/1.-integrity-eng.pdf (அணுகப்பட்டது 29 ஒக்டோபர் 2021).

[3] சத்துஷிகா விஜேசிங்க மற்றும் சங்கிதா குணரட்ன, ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் ஸ்ரீ லங்கா, IRM ஆய்வாளருடனான நேர்காணல், 15 நவம்பர் 2021.

[4] வின்யா ஆரியரட்ன (சர்வோதய), IRM ஆய்வாளருடனான நேர்காணல், 21 டிசம்பர் 2021.

[5] "மருந்துப் பொருட்கள் விநியோக பிரிவு" ("Medical Supplies Division"), சுகாதார, போஷாக்கு மற்றும் சுதேச மருந்துப் பொருட்கள் மருத்துவ விநியோக பிரிவு அமைச்சு, 5 நவம்பர் 2021, https://www.msd.gov.lk/index.php/31-msmis-expansion-project.

[6] வின்யா ஆரியரட்ன (சர்வோதய), IRM ஆய்வாளருடனான நேர்காணல், 21 டிசம்பர் 2021.

[7] வின்யா ஆரியரட்ன (சர்வோதய), IRM ஆய்வாளருடனான நேர்காணல், 21 டிசம்பர் 2021.

[8] "இலங்கையில் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகிய 100,000 பேரில் பாடசாலை சிறுவர்களும் அடங்குகின்றனர்" ("School children among 100,000 drug addicts in Sri Lanka,") கொழும்பு கஸெட் (5 பெப்ரவரி 2021), https://colombogazette.com/2021/02/05/school-children-among-100000-drug-addicts-in-sri-lanka/ (accessed November 11, 2021).

[9] ரதியா ரமீஸ், "பொட்டலங்களில் பிரவுணிகள் மாத்திரமல்ல: இலங்கை பாடசாலைகளில் போதைப் பொருள் பாவனை பற்றிய கதை" ("Not Just Pot Brownies: The Story Of Drug Use In Sri Lankan Schools"), 6 நவம்பர் 2018, https://roar.media/english/life/in-the-know/not-just-pot-brownies-the-story-of-drug-use-in-sri-lankan-schools

[10] "GIC இல் உள்வாங்கப்பட்டுள்ள அரசாங்க நிறுவனங்களின் பட்டியல்" ("LIST OF GOVERNMENT ORGANIZATION COVERED BY GIC,") https://gic.gov.lk/gic/index.php/en/component/org/ (accessed November 5, 2021).

[11] "Government Information Center – GIC 1919 Annual Report," Government Information Centre (2013), https://gic.gov.lk/gic/pdf/GIC_Annual_Report_2013.pdf (accessed January 24, 2022).

[12] "அரசாங்க தகவல் நிலையம்" ("Government Information Centre,") அரசாங்க தகவல் நிலையம், https://gic.gov.lk/gic/ (அணுகப்பட்டது 11 நவம்பர் 2021).

[13] "இலங்கை திறந்தடேட்டா கட்டமைப்பு" ("OpenData Portal of Sri Lanka,") தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவரமைப்பு (இறுதியாக மெருகேற்றப்பட்டது 3 பெப்வரி 2020), http://www.data.gov.lk/search/type/dataset (அணுகப்பட்டது 5 நவம்பர் 2021).

[14] "இலங்கை e-விவசாய தந்திரோபாயம் – ஜுன் 2016" ("Sri Lanka e-agriculture strategy – June 2016"), விவசாயத் திணைக்களம், https://www.doa.gov.lk/ICC/images/publication/Sri_Lanka_e_agri_strategy_-June2016.pdf.

[15] லயனல் விஜேசிறி, "விவசாயத் துறையின் சவால்களும் மறுசீரமைப்புகளும்" ("Agriculture sector challenges and reforms"), 16 டிசம்பர் 2018, http://www.sundayobserver.lk/2018/12/16/thoughts/agriculture-sector-challenges-and-reforms.

[16] "இடைத்தரகர்களிடமிருந்து விவசாயிகளையும் நுகர்வோரையும் பாதுகாப்பதற்காக புதிய தொழில்நுட்ப அப்ளிகேஷன் அறிமுகம்" ("New technical application introduced to save farmer and consumer from middleman,") பிஸ்னஸ் நியுஸ் (27 மாரச் 2021), https://www.businessnews.lk/2021/03/27/new-technical-application-introduced-to-save-farmer-and-consumer-from-middleman/ (accessed November 11, 2021)

[17] சைமன் கெம்ப், "டிஜிட்டல் 2021: இலங்கை" ("Digital 2021: Sri Lanka,") *Datareportal* (ஜனவரி 2021), https://datareportal.com/reports/digital-2021-sri-lanka (அணுகப்பட்டது 5 ஜனவரி 2022)

[18] பத்மினி மென்டிஸ் (மாற்றுத்திறன் மற்றும் புனருத்தாரண ஆலோசகர்), IRM உடனான தொடர்பாடலின் போது, 10 டிசம்பர் 2021.

[19] "மாற்றுத்திறனாளிகளும் பொருத்தமான வீடொன்றை சொந்தமாகக் கொண்டிருப்பதற்கான அவர்களின் உரிமையும்" ("Disabled persons and their right to own a suitable house"), டெய்லி நியுஸ், 7 டிசம்பர் 2019, https://www.dailynews.lk/2019/12/07/features/205021/disabled-persons-and-their-right-own-suitable-house.

[20] "மாற்றுத்திறனாளிகளும் பொருத்தமான வீடொன்றை சொந்தமாகக் கொண்டிருப்பதற்கான அவர்களின் உரிமையும்" ("Disabled persons and their right to own a suitable house"), டெய்லி நியுஸ், 7 டிசம்பர் 2019, https://www.dailynews.lk/2019/12/07/features/205021/disabled-persons-and-their-right-own-suitable-house.

[21] "இலங்கையில் அனர்த்த இடர் குறைப்பு: நிலை அறிக்கை 2019" ("Disaster Risk Reduction in Sri Lanka: Status Report 2019"), 2019, https://www.unisdr.org/files/68230_10srilankadrmstatusreport.pdf.

[22] ஆனந்த கன்னங்கர, "தேசிய சூழல் கொள்கை சட்டத்தை வலிமைப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவம் உணர்த்தப்பட்டுள்ளது" ("Importance of strengthening National Environmental Policy Act stressed"), டெய்லி நியுஸ், 5 ஒக்டோபர் 2021, https://www.dailynews.lk/2021/10/05/business/261031/importance-strengthening-national-environmental-policy-act-stressed.

[23] "தேசிய சூழல் கொள்கை 2021 தொடர்பாலி பொது மக்களின் கருத்துக்களுக்கான அழைப்பு" ("Calling for Public Comments on the National Environment Policy 2021,") சுற்றாடல் அமைச்சு (18 ஆகஸ்ட் 2021), https://env.gov.lk/web/index.php?option=com_content&view=article&id=174:calling-for-public-comments-on-the-national-environment-policy-2021&catid=36:special-other-notices&lang=en&Itemid=321 (accessed November 5, 2021).

[24] "தேசிய சூழல் கொள்கை 2021 வரைபு தொடர்பான திறந்த கலந்துரையாடல்" ("Open Dialogue on the Draft National Environmental Policy 2021,") SYLCAN ட்ரஸ்ட், https://www.slycantrust.org/open-dialogue-on-the-draft-national-environmental-policy-2021 (அணுகப்பட்டது 11 நவம்பர் 2021).

[25] ஹேமந்தி குணசேகர (இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனம்), IRM உடனான தொடர்பாடலின் போது, 14 டிசம்பர் 2021.

[26] பவனி ஹபுஆரச்சி, "பயணிகள் தேவைப்பாடுகள் தொடர்பில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு கருத்துக்கணிப்பை முன்னெடுப்பு" ("National Transport Commission conducts survey on Passenger Requirements,") *News 1st* (24 மே 2020), https://www.newsfirst.lk/2020/05/24/national-transport-commission-conducts-survey-on-passenger-requirements/ (அணுகப்பட்டது 5 நவம்பர் 2021).

[27] "தேசிய போக்குவரத்து ஆணைக்குழு" ("National Transport Commission,") தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, https://www.ntc.gov.lk/index.php (அணுகப்பட்டது 5 நவம்பர் 2021).

[28] அமன்டா அடம்செக் et al, "ஏழு தெற்காசிய நாடுகளில் சிறுவர் உரிமைகள் தொடர்பான மாநாட்டின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தல்" ("The Implementation of the Convention on the Rights of Children in Seven South Asian Countries,") *Institutionalized Children Explorations and Beyond* 7:1 (2020), https://journals.sagepub.com/doi/pdf/10.1177/2349300319894862 (அணுகப்பட்டது 7 ஜனவரி 2022).

[29] வின்யா ஆரியரட்ன (சர்வோதய), IRM ஆய்வாளருடனான நேர்காணல், 21 டிசம்பர் 2021.

## *III.* பல்-துறைசார்ந்தவர்களின் செயன்முறை

### *3.1.* பல்-துறைசார்ந்தவர்களின் செயன்முறை அடங்கிய செயற்திட்ட வடிவமைப்பு மற்றும் நடைமுறைப்படுத்தல்

*2017* ஆம் ஆண்டில் *திறந்த அரசாங்க பங்குடமையினால் (OGP), OGP* சுழற்சியின் சகல கட்டங்களிலும் சிவில் சமூகத்தின் பங்கேற்பு மற்றும் இணை உருவாக்கத்துக்கு ஆதரவளிக்கும் வகையில் *திறந்த அரசாங்க பங்குடமை (OGP)* பங்கேற்பு மற்றும் இணை உருவாக்க நியமங்கள் பின்பற்றப்பட்டிருந்தன. *திறந்த அரசாங்க பங்குடமையில் (OGP)* பங்கேற்கும் சகல நாடுகளும் இந்த நியமங்களை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தன. வடிவமைப்பு மற்றும் நடைமுறைப்படுத்தலின் போது பங்கேற்பின் தரம் மற்றும் உயர் அவாவை அதிகரிப்பது மற்றும் *திறந்த அரசாங்க பங்குடமை (OGP)* செயற்திட்டங்களை மீளாய்வு செய்வது நியமங்களின் இலக்காக அமைந்திருந்தது.

*திறந்த அரசாங்க பங்குடமையின் (OGP)* ஆளுகை தொடர்பான ஆக்கங்களினூடாக பங்கேற்பு மற்றும் இணை உருவாக்க தேவைப்பாடுகளை நாடுகளுக்கு அல்லது நிறுவனத்துக்கு நிறுவப்பட்டிருந்ததுடன், அவை தமது செயற்திட்ட வடிவமைப்பு மற்றும் நடைமுறைப்படுத்தலின் போது *திறந்த அரசாங்க பங்குடமை (OGP)* செயன்முறைக்கமைய இயங்குவதை உறுதி செய்வதாக அமைந்திருந்தது. *திறந்த அரசாங்க பங்குடமை (OGP)* செயன்முறைக்கு முரணான வகையில் இலங்கை **இயங்கியிருந்தது**.[1] தேசிய செயற்திட்டத்தின் நடைமுறைப்படுத்தலின் போது இலங்கை பொது மக்கள் மத்தியில் செல்வாக்கு செலுத்துவதற்காக "அறிவிப்பது" எனும் நிலையை பூர்த்தி செய்யவில்லை என்பதுடன் *சுயாதீன அறிக்கையிடல் பொறிமுறை (IRM)* வழிகாட்டல்களுக்கமைய களஞ்சிய இருப்பு தொடர்பான ஆவணம் எதனையும் வெளியிடவுமில்லை.[2]

செயற்திட்ட வடிவமைப்பு மற்றும் நடைமுறைப்படுத்தலின் போது இலங்கையின் வினைத்திறன் நடைமுறைப்படுத்தல் இணை உருவாக்கம் மற்றும் பங்கேற்பு நியமங்கள் தொடர்பான மேலோட்டத்தை *3.2* ஆம் பிரிவில் பார்க்கவும்.

*அட்டவணை [3.2]: பொது மக்கள் மத்தியில் செல்வாக்கும் செலுத்தும் நிலை*

*திறந்த அரசாங்க பங்குடமையில் (OGP)* பிரயோகிப்பதற்காக *சுயாதீன அறிக்கையிடல் பொறிமுறையினால் (IRM)* பொது பங்கேற்புக்கான சர்வதேச சம்மேளனம் *(IAP2) "Spectrum of Participation"* என்பதை பின்பற்றியிருந்ததுடன், *திறந்த அரசாங்க பங்குடமையில் (OGP)* பிரயோகித்திருந்தது.[3] *திறந்த அரசாங்க பங்குடமையின் (OGP)* கருவுருவுக்கமைய, பெருமளவான நாடுகள் "கைகோர்ப்பு" என்பது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

| பொதுமக்கள் மத்தியில் செல்வாக்கு செலுத்தும் நிலை | | செயற்திட்டம் வடிவமைக்கப்படும் போது | செயற்திட்டம் நடைமுறைப்படுத்தும் போது |
|---|---|---|---|
| வலுவூட்டல் | பொது அங்கத்தவர்களிடம் தீர்மானமெடுக்கும் அதிகாரத்தை அரசாங்கம் கையளித்திருந்தது. | | |
| கைகோர்ப்பு | பல் செயலாற்றுகை கலந்துரையாடல் காணப்பட்டதுடன், நிகழ்ச்சிநிரலை தயாரிப்பதற்கு பொது மக்கள் உதவியிருந்தனர். | ✓ | |
| ஈடுபாடு | பொது மக்களின் உள்ளீடுகள் எவ்வாறு கவனத்தில் கொள்ளப்பட்டிருந்தன என்பது தொடர்பில் அரசாங்கத்தினால் கருத்தளிப்பு வழங்கப்பட்டிருந்தது. | | |
| கலந்தாலோசிப்பு | பொது மக்களால் உள்ளீடுகள் வழங்கப்படலாம். | | |
| அறிவிப்பு | செயற்திட்டம் தொடர்பில் பொது மக்களுக்கு அரசாங்கம் தகவல்களை வழங்கியிருந்தது. | | |
| கலந்தாலோசிக்கப்படவில்லை | **கலந்தாலோசிக்கப்படவில்லை** | | ✓ |

**வடிவமைப்பின் போது பல்-துறைசார் பங்காளர் செயன்முறை**

*ஜனாதிபதி செயலகம், அரசாங்க தொடர்புநிலை அதிகாரி மற்றும் ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நஷனல் ஸ்ரீ லங்கா ஆகியவற்றுடன் இணைந்து இணை-உருவாக்க செயன்முறை முன்னெடுக்கப்பட்டிருந்தது. முதல் செயற்திட்டத்தின் இறுதிக் கட்டத்தில், உள்நாட்டு மீளமைப்பை தெரிவு செய்வதற்கு சிவில் சமூக நிறுவனங்களை (CSO) ஊக்குவிப்பதற்கு பதிலளிக்கும் வகையில், வெளியுறவு அமைச்சிலிருந்து ஜனாதிபதி செயலகத்துக்கு திறந்த அரசாங்க பங்குடமை (OGP) செயன்முறையின் பொறுப்புகள் மாறியிருந்தது. ட்ரான்பேரன்ஸி இன்டர்நஷனலின் பிரகாரம், அழைப்பாளராக ஜனாதிபதி செயலகம் அமைந்திருந்ததுடன், செயலகத்தினால் வெளியிடப்படும் அழைப்பிதழ்கள் அல்லது சுற்றறிக்கைகளுக்கு பதிலளிக்கக்கூடிய வகையில் அமைச்சுகள் அமைந்திருப்பதை சுட்டிக்காட்டியிருந்தது.*[4]

*முன்னைய செயற்திட்டத்தை விட செயற்திட்டத்தின் வடிவமைப்பானது, அரசாங்கம் மற்றும் சிவில் சமூகங்களுக்கிடையே கைகோர்ப்பை ஏற்படுத்துவதற்கு அதிகளவு வாய்ப்புகளை வழங்கியிருந்தது. முதலாவது செயற்திட்டம் சிவில் சமூக நிறுவனங்களினால் (CSO) வடிவமைக்கப்பட்டிருந்ததுடன், வெளியுறவுத் துறை அமைச்சின் முன்னாள் திறந்த அரசாங்க பங்குடமை (OGP) தலைமைத்துவத்துக்கு வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இதன் போது சம்பந்தப்பட்ட நடைமுறைப்படுத்தும் முகவர் அமைப்புகளிடமிருந்து ஆகக்குறைந்தளவு உள்ளீடுகள் பெறப்பட்டிருந்தன. சில மீளாய்வுகளுடன் அமைச்சரவையினால் திட்டம் நிவர்த்தி செய்யப்பட்டிருந்தது. ஒப்பீட்டளவில், பொது மக்களின் கருத்துகள் மற்றும் உள்ளீடுகளை கவனத்தில் கொண்டு, சம்பந்தப்பட்ட அமைச்சுகள் மற்றும் சிவில் சமூக நிறுவனங்களின் (CSO) பங்கேற்புடன் இரண்டாவது செயற்திட்டம் வடிவமைக்கப்பட்டிருந்தது. செயன்முறை தொடர்பில் பொது அதிகாரிகளின் விழிப்புணர்வை மேம்படுத்துவதிலும் மாகாண ஆலோசனைகளின் போது வரவை ஊக்குவிப்பதிலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உதவிகளை வழங்கியிருந்தனர்.*[5]

*இலங்கையின் மாகாணங்களில் கலந்துரையாடல்களின் போது எழுந்திருந்த பிரச்சனைகளின் பிரகாரம் கடமைப் பொறுப்புகள் வடிவமைக்கப்பட்டிருந்தன. ஒன்பது கலந்துரையாடல்களில், அரசாங்கம், சிவில் சமூகம் மற்றும் இதர பங்காளர்கள் அடங்கியிருந்தனர். அரசாங்க அதிகாரியினால், அழைப்பிதழ்கள் வழங்கப்பட்டதுடன், இந்த கலந்துரையாடல்களுக்கான அமைவிடங்கள் பெறப்பட்டிருந்தன. அத்துடன், அவற்றில் ஏழில் பங்கேற்றிருந்தது. கலந்துரையாடல்களின் போது, மூன்றாம் தரப்பு நிபுணரை அழைப்பாளராக ஈடுபடுத்தி புதிய செயன்முறையை இலங்கை பின்பற்றியிருந்தது. இணைந்த சிந்தனை மற்றும் நடைமுறைப்படுத்தும் முகவர் அமைப்புகளிடமிருந்து தகவல் பெறும் வழிமுறைக்கு பங்களிப்பு வழங்கியிருந்தது.*[6] *நேர நெருக்கடி காரணமாக மாகாண மட்டத்தில் உறுதி செய்யும் கலந்துரையாடல்கள் எதுவும் இடம்பெறவில்லை. செயற்திட்டம் ஒரு வருட காலப்பகுதியினால் தாமதமடைந்திருந்ததுடன், 2019 – 2021 க்கு தனது நடைமுறைப்படுத்தும் காலப்பகுதியை மாற்றியிருந்தது. ஒன்பது கலந்துரையாடல்களைத் தொடர்ந்து, கடமைப்பொறுப்பு இலக்குகளை வடிவமைப்பதில் சந்திப்புகள் பிரதானமாக கவனம் செலுத்தியிருந்தன. முன்னைய செயற்திட்டத்தின் மீளாய்வுடன் செயன்முறை ஆரம்பமாகியிருந்ததுடன், இதில் பங்கேற்கும் சகல அரசாங்க அமைப்புகள், சிவில் சமூக நிறுவனங்களும் (CSO) அடங்கியிருந்தன. சிவில் சமூக நிறுவனங்கள் (CSO) மற்றும் அமைச்சு அதிகாரிகள் கைகோர்த்து, கடமைப்பொறுப்புகளை இணை உருவாக்கம் செய்து இறுதிப்படுத்தியிருந்தனர். அதன் பின்னர் செயற்திட்டம் இலங்கையின் திறந்த அரசாங்க பங்குடமை (OGP) இணையத்தளத்தில் பொது மக்களின் கருத்துகளுக்காக பிரசுரிக்கப்பட்டு, பெறப்பட்ட விமர்சனங்கள் உள்ளடக்கப்பட்டன.*[7] *2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முன்னாள் ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட இரண்டாவது தேசிய செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவை அனுமதியளித்திருந்தது.*[8]

**நடைமுறைப்படுத்தலின் போது பல்-துறைசார் பங்காளர் செயன்முறை**

*நடைமுறைப்படுத்தலின் முதல் காலாண்டு பகுதியில், சம்பந்தப்பட்ட அரசாங்க முகவர் அமைப்புகள் தமது நடைமுறைப்படுத்தலை ஆரம்பித்திருந்ததுடன் தமது முதலாவது காலாண்டு கண்காணிப்பு மற்றும் மதிப்பாய்வு அறிக்கைகளை சமர்ப்பித்திருந்தன. எவ்வாறாயினும், 2019 நவம்பர் மாதம் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலைத் தொடர்ந்து, அரசாங்க முகவர் அமைப்புகளினால் நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகள் முழுமையாக இடைநிறுத்தப்பட்டன. புதிய அரசாங்கத்தினால் திறந்த அரசாங்க செயன்முறைக்கான முக்கியத்துவத்தை இல்லாமல் செய்திருந்ததுடன், திறந்த அரசாங்க பங்குடமையினால் (OGP), OGP தொடர்பு கொள்ளும் அதிகாரி நியமிக்கப்படவில்லை என்பதுடன், செயற்திட்டம் தொடர்பான பெரும்பாலான சிவில் சமூக கோரிக்கைகளுக்கு பதிலளிக்கவுமில்லை. செயற்திட்டத்தை அரசாங்கம் நடைமுறைப்படுத்துவதில் மிகவும் குறைந்தளவான முன்னேற்றம் பதிவாகியிருந்ததுடன், செயற்திட்டம் காணப்படுகின்றமை தொடர்பில் மிகவும் சொற்ப அரசாங்க விழிப்புணர்வு காணப்பட்டது. சிவில் சமூகத்தின் சில பிரிவுகள் சில கடமைப்பொறுப்புகளை நடைமுறைப்படுத்துவதை சுயாதீனமான முறையில் முன்னெடுத்திருந்தன.*[9]

---

1 *செயன்முறைக்கு முரணாக செயலாற்றுவது* – *நாடு பின்வருவனவற்றை உறுதி செய்யவில்லை* (1) NAP *இன் வடிவமைப்பின் போது* "*ஈடுபடுத்தல்*" *அல்லது நடைமுறைப்படுத்தலின் போது* "*அறிவிப்பு*" (2) IRM *வழிகாட்டலின் பிரகாரம் இணையத்தளம்/இணையப்பக்கத்தில் தகவல் சேகரிப்பு, வெளியீடு மற்றும் ஆவணப்படுத்தல் களஞ்சியமொன்றை பதிவிட அரசாங்கம் தவறியிருந்தமை.*

2 "*ஒன்லைன் ஆவண களஞ்சியத்திரட்டுக்கான* IRM *வழிகாட்டல்*", *திறந்த அரசாங்க பங்காண்மை*, 1 *மார்ச்* 2020, https://www.opengovpartnership.org/documents/irm-guidance-for-online-repositories/.

[3] "IAP2'இன் பொது பங்கேற்பு பிரிக்கை," IAP2, 2014. https://cdn.ymaws.com/www.iap2.org/resource/resmgr/pillars/Spectrum_8.5x11_Print.pdf

[4] *சத்துஷிகா விஜயசிங்க* (*நிகழ்ச்சித்திட்ட அதிகாரி – திறந்த அரசாங்க பங்காண்மை, ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் ஸ்ரீ லங்கா*), IRM *ஆய்வாளரால் மேற்கொள்ளப்பட்ட நேர்காணல்*, 07 *ஒக்டோபர்* 2020.

[5] *சத்துஷிகா விஜயசிங்க* (*நிகழ்ச்சித்திட்ட அதிகாரி – திறந்த அரசாங்க பங்காண்மை, ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் ஸ்ரீ லங்கா*), IRM *ஆய்வாளரால் மேற்கொள்ளப்பட்ட நேர்காணல்*, 07 *ஒக்டோபர்* 2020.

[6] *சத்துஷிகா விஜயசிங்க* (*நிகழ்ச்சித்திட்ட அதிகாரி – திறந்த அரசாங்க பங்காண்மை, ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் ஸ்ரீ லங்கா*), IRM *ஆய்வாளரால் மேற்கொள்ளப்பட்ட நேர்காணல்*, 07 *ஒக்டோபர்* 2020.

[7] *சங்கிதா குணரட்ன* (*பிரதி நிறைவேற்று பணிப்பாளர், நிகழ்ச்சிகளுக்கான சிரேஷ்ட முகாமையாளர் – ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் ஸ்ரீ லங்கா*)

[8] "22.01.2019 *அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது அமைச்சரவையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள்*", news.lk, 23 *ஜனவரி* 2019, https://www.news.lk/cabinet-decusions/item/23866-decisions-taken-by-the-cabinet-of-ministers-at-its-meeting-held-on-22-01-2019

[9] *சத்துஷிகா விஜயசிங்க மற்றும் சங்கிதா குணரட்ன, ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் ஸ்ரீ லங்கா*, IRM *ஆய்வாளரால் மேற்கொள்ளப்பட்ட நேர்காணல்*, 15 *நவம்பர்* 2021.

## *3.2. செயற்திட்ட நடைமுறைப்படுத்தலின் போது இலங்கையின் வினைத்திறன் பற்றிய மேலோட்டம்*

*குறிகாட்டி:*
*பச்சை= நியமத்தை பூர்த்தி செய்தது*
*மஞ்சள் = தற்போது முன்னெடுக்கப்படுகின்றது (நியமத்தை பூர்த்தி செய்யும் படிமுறைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள போதிலும், நியமங்கள் பூர்த்தி செய்யப்படவில்லை)*
*சிவப்பு= செயற்பாட்டுக்கான எவ்வித ஆதாரங்களும் இல்லை*

| ***பல்-துறைசார் அமர்வு*** | *வடிவமைப்பின் போது* | *நடைமுறைப்படுத்தலின் போது* |
|---|---|---|
| ***1a. அமர்வு நிறுவப்படல்: பல்துறைசார் பங்காளர் அமர்வில் அரசாங்கம் மற்றும் சிவில் சமூக நிறுவன (CSO) பிரதிநிதிகள் உள்ளடங்கியிருந்ததுடன், இவர்கள் செயற்திட்டத்தின் வடிவமைப்பை மேற்பார்வை செய்திருந்தனர். நடைமுறைப்படுத்தும் காலப்பகுதியில் அது செயற்படாத நிலையை எய்தியிருந்தது.*** | *பச்சை* | *சிவப்பு* |
| *1b. தொடர்தன்மை: இணை உருவாக்க செயன்முறையின் இந்த அமர்வு சில தடவைகள் சந்தித்திருந்ததுடன், ஆறு மாத காலங்களுக்கு இது நிலைத்திருந்தது, நடைமுறைப்படுத்தும் காலப்பகுதியில் எவ்வித சந்திப்புகளையும் மேற்கொள்ளவில்லை.* | *மஞ்சள்* | *சிவப்பு* |
| *1c. கைகோர்ப்பு ஆணை தயாரிப்பு: அமர்வின் அங்கத்தவர்கள் இணைந்து அதன் செயற்படுத்தல், அங்கத்துவம் மற்றும் ஆளுகை கட்டமைப்பை முன்னெடுத்திருந்தமைக்கான எவ்விதமான ஆதாரங்களையும் சுயாதீன அறிக்கையிடல் பொறிமுறை (IRM) இனால் இனங்காண முடியவில்லை.* | *சிவப்பு* | *N/A* |
| *1d. பொது ஆணை: அமர்வின் செயற்படுத்தல், அங்கத்துவம் மற்றும் ஆளுகை கட்டமைப்பு தொடர்பான தகவல்கள் தேசிய திறந்த அரசாங்க பங்குடமை (OGP) இணையத்தளத்தில் காணப்படவில்லை.* | *சிவப்பு* | *சிவப்பு* |
| ***2a. பல்-துறைசார் பங்காளர்: அமர்வில் அரசாங்க மற்றும் அரச சார்பற்ற பிரதிநிதிகள் அடங்கியிருந்தனர்.*** | *பச்சை* | *சிவப்பு* |
| *2b. சமத்துவம்: சம அளவிலான அரசாங்க மற்றும் அரச சார்பற்ற துறைசார் பங்காளர்கள் ஈடுபட்டிருந்த போதிலும், தீர்மானமெடுக்கும் அதிகாரம் சமமற்ற வகையில் பகிரப்பட்டிருந்தது.* | *மஞ்சள்* | *சிவப்பு* |
| *2c. வெளிப்படையான தெரிவு: அமர்வின் அரச சார்பற்ற அங்கத்தவர்கள் நேர்த்தியான மற்றும் வெளிப்படையான செயன்முறையினூடாக தெரிவு செய்யப்பட்டிருந்தமைக்கான ஆதாரத்தை சுயாதீன அறிக்கையிடல் பொறிமுறை (IRM) இனங்காணவில்லை.* | *சிவப்பு* | *N/A* |
| *2d. உயர்மட்ட அரசாங்க பிரதிநிதித்துவம்: அமைச்சின் செயலாளர் அல்லது மேலதிக செயலாளரின் பங்கேற்புடன், அமர்வில் உயர்ந்தளவு அரசாங்க பிரதிநிதித்துவம் காணப்பட்டது. நடைமுறைப்படுத்தலின் போது, அரசாங்கத்தின் பங்குபற்றல் இடம்பெற்றிருக்கவில்லை.* | *பச்சை* | *சிவப்பு* |
| *3a. வெளிப்படைத்தன்மை: வடிவமைப்பு செயன்முறையின் போது, ஒன்பது மாவட்டங்களில் கலந்தாலோசனைகள் இடம்பெற்றதுடன், அதில் சிவில் சமூக நிறுவனங்கள் (CSO) மற்றும் இதர பங்காளர்களிடமிருந்து உள்ளீடுகள் பெறப்பட்டிருந்தன. நடைமுறைப்படுத்தலின் போது, அமர்வினால் எந்தவொரு சிவில் சமூகம் அல்லது அமர்வுக்கு அப்பாலான இதர பங்காளர்களிடமிருந்து பிரதிநிதித்துவம் மற்றும் உள்ளீடுகளை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதுடன் அவர்களை அழைக்கவுமில்லை.* | *பச்சை* | *சிவப்பு* |

| | | |
|---|---|---|
| *3b.* தொலைவிலிருந்து பங்குபற்றல்: தொலைதூர பங்குபற்றலுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்தயிருந்ததற்கான ஆதாரங்கள் எதனையும் சுயாதீன அறிக்கையிடல் பொறிமுறை (IRM) காணவில்லை. | சிவப்பு | சிவப்பு |
| *3c.* குறிப்புகள்: பரந்தளவு அரசாங்கம் மற்றும் சிவில் சமூக பங்காளர்களுக்கு திறந்த அரசாங்க பங்குடமை (OGP) அமர்வின் தீர்மானங்கள், செயற்பாடுகள் மற்றும் பெறுபேறுகள் தொடர்பில் எவ்விதமான தொடர்பாடல்கள் மற்றும் அறிக்கையிடல்களும் மேற்கொள்ளப்படவில்லை. | சிவப்பு | சிவப்பு |

| ***செயற்திட்டம் தயாரிப்பு*[1]** | |
|---|---|
| *4a.* செயன்முறை வெளிப்படைத்தன்மை: திறந்த அரசாங்க பங்குடமை (OGP) செயன்முறைக்காக ஜனாதிபதி செயலகத்தின் இணையத்தளத்தின் ஒரு பக்கம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பில் இந்தப் பக்கத்தில் பதிவேற்றம் இடம்பெறவில்லை.[2] | சிவப்பு |
| *4b.* முன்கூட்டியே ஆவணப்படுத்தல்: திறந்த அரசாங்க பங்குடமை (OGP) பற்றி அதன் பங்காளர்களுக்கு முன்கூட்டியே அறிவித்தல் வழங்கி செயன்முறையின் சகல கட்டங்களிலும் அவர்களை பங்கேற்கச் செய்வதற்கு தயார்நிலையில் வைத்திருப்பதற்கான ஆதாரங்கள் எதனையும் சுயாதீன அறிக்கையிடல் பொறிமுறை (IRM) கண்டறியவில்லை. | சிவப்பு |
| *4c.* விழிப்புணர்வு-ஏற்படுத்தல்: வடிவமைப்பு செயன்முறையின் போது, திறந்த அரசாங்க பங்குடமை (OGP) செயன்முறை தொடர்பில் அறிவிப்பதற்கு சம்பந்தப்பட்ட பங்காளர்களுடன் சென்றடைவு மற்றும் விழிப்புணர்வை மேம்படுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. | மஞ்சள் |
| *4d.* தொடர்பாடல் நாளிகைகள்: இரண்டாவது தேசிய செயற்திட்ட வடிவமைப்பு தொடர்பில் பல்வேறு சந்திப்புகள் இடம்பெற்றதுடன், வடிவமைப்பு செயன்முறைக்காக உள்ளீடுகளைப் பெற்றுக் கொள்வதற்கு திறந்த அரசாங்க பங்குடமை (OGP) இணையத்தளத்தில் மின்னஞ்சல் முகவரி குறிப்பிடப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் நடைமுறைப்படுத்தும் காலப்பகுதியில் அரசாங்கம் மற்றும் சிவில் சமூகத்துடன் நேரடித் தொடர்பாடல்கள் இடம்பெற்றிருக்கவில்லை. | மஞ்சள் |
| ***4e.* காரணிய பதிலளிப்பு: வடிவமைப்பு செயன்முறையின் ஆரம்பத்தின் போது பொது மக்களுடன் கலந்தாலோசனைகள் இடம்பெற்றது. ஆனாலும் பொது மக்களின் கருத்துகளுக்கு போதியளவு பதில்களை அரசாங்கம் வெளியிடவில்லை.** | மஞ்சள் |
| ***4f.* ஆவண களஞ்சியம்: *சுயாதீன அறிக்கையிடல் பொறிமுறை (IRM) வழிகாட்டலுக்கமைய* அரசாங்கம் எவ்விதமான ஆவணப்படுத்தல், சேகரிப்பு மற்றும் பிரசுரிப்பையும் தேசிய திறந்த அரசாங்க பங்குடமை (OGP) இணையத்தளத்தில் வெளியிடவில்லை.[3]** | சிவப்பு |

| ***செயற்திட்டம் நடைமுறைப்படுத்தல்*[4]** | |
|---|---|
| *5a.* செயன்முறை வெளிப்படைத்தன்மை: ஜனாதிபதி செயலகத்தின் இணையத்தளத்தில் ஒரு பக்கம் திறந்த அரசாங்க பங்குடமை (OGP) செயன்முறைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனாலும் கடமைப்பொறுப்புகளின் முன்னேற்றம் தொடர்பில் இந்தப் பக்கத்தில் பதிவேற்றம் செய்யப்படவில்லை.[5] சுய-மதிப்பீட்டு அறிக்கை வெளியிடப்படவில்லை. | சிவப்பு |
| *5b.* தொடர்பாடல் நாளிகைகள்: செயற்திட்டத்தின் நடைமுறைப்படுத்தலின் போது அரசாங்கம் மற்றும் சிவில் சமூகத்துக்கிடையிலான நேரடித் தொடர்பாடல் இடைநிறுத்தப்பட்டிருந்தது. | சிவப்பு |

| | |
|---|---|
| *5c. சிவில் சமூகத்துடன் ஈடுபாடு: செயற்திட்டத்தின் நடைமுறைப்படுத்தலின் போது சிவில் சமூகத்துடன் அரசாங்கம் ஈடுபாட்டை பேணவில்லை.* | *சிவப்பு* |
| *5d. சுயாதீன அறிக்கையிடல் பொறிமுறை (IRM) உடன் கைகோர்ப்பு: இலங்கையின் தற்போதைய நிர்வாகம் திறந்த அரசாங்க பங்குடமை (OGP) செயன்முறையை மீள ஆரம்பிக்காத நிலையிலும், நடைமுறைப்படுத்தல் முகவர் அமைப்புகளில் திறந்த அரசாங்க பங்குடமை (OGP) தொடர்பு கொள்ளும் தரப்பு இல்லாத நிலையிலும், இந்த செயற்திட்ட அறிக்கைக்காக சுயாதீன அறிக்கையிடல் பொறிமுறையினால் (IRM) வடிவமைப்பு அறிக்கை ஒன்று வேறாக பிரசுரிக்கப்படவில்லை.* | *N/A* |
| *5e. MSF ஈடுபாடு: செயற்திட்டத்தின் நடைமுறைப்படுத்தலை எவ்வாறு மேம்படுத்துவது என்பது தொடர்பில் பல்துறைசார்-பங்காளர் அமர்வினால் கண்காணிப்புகள் மற்றும் ஈடுபாடுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.* | *சிவப்பு* |
| *5f. சுயமதிப்பீட்டு அறிக்கையுடன் MSF ஈடுபாடு: அரசாங்கத்தினால் தவணை நிறைவு சுய மதிப்பீட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை.* | *சிவப்பு* |
| ***5g. ஆவண களஞ்சியம்: சுயாதீன அறிக்கையிடல் பொறிமுறை (IRM) வழிகாட்டலுக்கமைய அரசாங்கம் எவ்விதமான ஆவணப்படுத்தல், சேகரிப்பு மற்றும் பிரசுரிப்பையும் தேசிய திறந்த அரசாங்க பங்குடமை (OGP) இணையத்தளத்தில் வெளியிடவில்லை.*** | *சிவப்பு* |

[1] ***ஆசிரியர் குறிப்பு:*** *முன்னைய வடிவமைப்பு அறிக்கைகளில் காணப்படும் செயற்திட்ட வடிவமைப்பு அட்டவணைகளுடன் ஒப்பிடுகையில், இந்த கலப்பு அறிக்கையினுள் தொடர்ச்சித் தன்மையை பேணும் வகையில் இந்த அட்டவணை மீள இலக்கமிடப்பட்டுள்ளது. இலக்கமிடப்பட்ட விடயங்கள் உள்ளக பயன்பாட்டுக்காக.*

[2] "OGP," *ஜனாதிபதி செயலகம்,* https://www.presidentsoffice.gov.lk/index.php/ogp/ (*அணுகப்பட்டது* 28 *ஜனவரி* 2022).

[3] "*ஒன்லைன் ஆவண களஞ்சியத்திரட்டுக்கான* IRM *வழிகாட்டல்*", *திறந்த அரசாங்க பங்காண்மை,* 1 *மார்ச்* 2020, https://www.opengovpartnership.org/documents/irm-guidance-for-online-repositories/.

[4] *முன்னைய வடிவமைப்பு அறிக்கைகளில் காணப்படும் செயற்திட்ட வடிவமைப்பு அட்டவணைகளுடன் ஒப்பிடுகையில், இந்த கலப்பு அறிக்கையினுள் தொடர்ச்சித் தன்மையை பேணும் வகையில் இந்த அட்டவணை மீள இலக்கமிடப்பட்டுள்ளது. இலக்கமிடப்பட்ட விடயங்கள் உள்ளக பயன்பாட்டுக்காக.*

[5] "OGP", *ஜனாதிபதி செயலகம்,* https://www.presidentsoffice.gov.lk/index.php/ogp/ (*அணுகப்பட்டது* 28 *ஜனவரி* 2022).

## IV. முறையியலும் மற்றும் மூலங்களும்

*சுயாதீன அறிக்கையிடல் பொறிமுறை (IRM) ஆய்வில் பயன்படுத்தப்பட்ட குறிகாட்டிகள் மற்றும் வழிமுறைகளை சுயாதீன அறிக்கையிடல் பொறிமுறை (IRM) செயன்முறை கையேட்டில் பார்வையிட முடியும்.[1] சுயாதீன அறிக்கையிடல் பொறிமுறையினால் (IRM) மதிப்பாய்வு செய்யப்பட்ட பிரதான குறிகாட்டிகள் கீழே சாராம்சப்படுத்தப்பட்டுள்ளன:*

- ***உறுதி செய்யக்கூடிய தன்மை:***
  - *"ஆம்" மீளாய்வுக்குட்படுத்த போதியளவு திட்டவட்டமாக அமைந்திருப்பது: செயற்திட்டத்தில் எழுதப்பட்டுள்ளதைப் போன்று, குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்கள் மற்றும் பிரேரிக்கப்பட்ட செயற்பாடுகள் போன்றன போதியளவு தெளிவாக அமைந்திருப்பதுடன், நடைமுறைப்படுத்தலை ஆராய்வதற்கு குறிக்கோளான முறையில் உறுதி செய்யக்கூடிய செயற்பாடுகளைக் கொண்டுள்ளது.*
  - *"இல்லை" மீளாய்வுக்குட்படுத்த போதியளவு திட்டவட்டமாக அமைந்திராமை: செயற்திட்ட அறிக்கையில் எழுதப்பட்டுள்ளதைப் போன்று, குறிப்பிடப்பட்ட இலக்குகள் மற்றும் பிரேரிக்கப்பட்ட செயற்பாடுகள் போதியளவு தெளிவுடையதாக அமைந்திருக்கவில்லை என்பதுடன் செயற்படுத்தலை மதிப்பாய்வு செய்வதற்கு உறுதி செய்யக்கூடிய செயற்பாடுகளை உள்ளடக்கியிருக்கவில்லை.*
    - *உறுதி செய்யப்பட முடியாத கடமைப்பொறுப்புகள் "மீளாய்வு செய்யப்பட முடியாதவை" என கருதப்படுவதுடன், மேலதிக மதிப்பாய்வுகள் எதுவும் முன்னெடுக்கப்படமாட்டாது.*
- ***வெளிப்படையான அரசாங்கத்துக்கு பொருத்தப்பாடு:*** *திறந்த அரசாங்க பங்குடமை (OGP) பெறுமதிகளுடன் பொருத்தமான கடமைப்பாடுகளை இந்த மாறுபடும் காரணி மதிப்பாய்வு செய்கின்றது. செயற்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைப்பொறுப்பு சொற்பதத்தின் அடிப்படையில், பொருத்தப்பாட்டை தீர்மானிக்கும் வழிகாட்டும் வினாக்களில் அடங்குபவையாவன:*
  - *தகவலுக்கான அணுகல்: பொது மக்களுக்கு அரசாங்கம் மேலும் தகவல்களை வெளிப்படுத்துமா அல்லது பொது மக்களுக்கு வெளிப்படுத்தப்படும் தகவலின் தரத்தை மேம்படுத்துமா?*
  - *பொது மக்கள் பங்கேற்பு: தீர்மானங்கள் அல்லது கொள்கைகளில் தாக்கம் செலுத்தக்கூடிய வாய்ப்புகளை அல்லது ஆற்றல்களை அரசாங்கம் உருவாக்குமா அல்லது மேம்படுத்துமா?*
  - *பொதுப் பொறுப்புக்கூறல்: பொது மக்களுக்கு முகங்கொடுத்து, அதிகாரிகளின் செயற்பாடுகளுக்கு பொறுப்புக்கூறும் நிலையை அரசாங்கம் ஏற்படுத்துமா அல்லது மேம்படுத்துமா?*
  - *வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலுக்கான தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம்: வெளிப்படைத்தன்மை அல்லது பொறுப்புக்கூறலை முன்னேற்றுவதற்கு மூன்றில் ஒரு திறந்த அரசாங்க பங்குடமை (OGP) பெறுமதிகளுக்கமைய தொழில்நுட்ப புத்தாக்கம் என்பது பயன்படுத்தப்படுமா?*
- ***தாக்க ஆற்றல்:*** *எழுதப்பட்டுள்ளதைப் போன்று கடமைப் பொறுப்பு பூர்த்தி செய்யப்பட்டிருந்தால் அதனால் ஏற்படக்கூடிய தாக்கத்தை மதிப்பாய்வு செய்யும் வகையில் இந்த மாறுபடும் காரணி அமைந்துள்ளது. செயற்திட்டத்திலிருந்து பெறப்பட்ட சொற்பதங்களை சுயாதீன அறிக்கையிடல் பொறிமுறை (IRM) ஆய்வாளர் பின்வருவனவற்றுக்காக பயன்படுத்தியிருந்தார்:*
  - *சமூக, பொருளாதார, அரசியல் அல்லது சூழல் பிரச்சனைகளை இனங்காண்பது;*
  - *செயற்திட்டத்தின் தற்போதுள்ள நிலையை ஏற்படுத்துவது; மற்றும்*
  - *கடமைப்பொறுப்பு நிறைவேற்றப்பட்டால் வினைத்திறனில் எந்தளவு தாக்கத்தை ஏற்படுத்தும் மற்றும் பிரச்சனைக்கு தீர்வாக அமைந்திருக்கும் என்பதை மதிப்பிடுவது.*
- ***பூர்த்தி:*** *கடமைப்பொறுப்பின் நடைமுறைப்படுத்தல் மற்றும் முன்னேற்றம் ஆகியவற்றை மதிப்பாய்வு செய்யும் வகையில் இந்த மாறுபடு காரணி அமைந்துள்ளது. செயற்திட்டத்தின் நிறைவில் இந்த மாறுபடு காரணி மதிப்பீடு செய்யப்படுகின்றது. ஒவ்வொரு கடமைப் பொறுப்புக்கும், இந்த மாறுபடு காரணி, ஆதாரங்கள் இல்லை, ஆரம்பிக்கப்படவில்லை, மட்டுப்படுத்தப்பட்டளவு, பெரும்பாலும் அல்லது பூர்த்தி எனும் வகையில் மதிப்பிடப்பட்டிருந்தது.*
- ***வெளிப்படையான அரசாங்கத்தை ஏற்படுத்தியிருந்ததா?:*** *அளவீட்டு வெளிப்பாடுகள் மற்றும் நிறைவேற்றப்பட வேண்டியவை போன்றவற்றுக்கு அப்பால் சென்று அரசாங்கத்தின் செயற்பாடுகள் திறந்த அரசாங்க பங்குடமை (OGP) பெறுமதிகளுடன் எந்தளவுக்கு பொருத்தப்பாடாக அமைந்துள்ளது என்பதை ஆராய்ந்து, கடமைப்பொறுப்பின் செயற்படுத்தலினூடாக எந்தளவுக்கு மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தது என்பதை மதிப்பிடும்*

*வகையில் அமைந்துள்ளது. இந்த மாறுபடு காரணி செயற்திட்டத்தின் நிறைவில் மதிப்பாய்வு செய்யப்பட்டிருந்தது. இந்த மாறுபடு காரணி, மாற்றத்தை ஏற்படுத்தவில்லை, எல்லையளவு, பாரியளவு அல்லது சிறந்தளவு எனும் வகையில் மதிப்பிடப்பட்டிருந்தது.*

*தூர நோக்குடைய அல்லது உறுதியான வடிவமைப்பைக் கொண்டிருந்த கடமைப்பொறுப்புகளின் நிறைவேற்றம் அல்லது தெளிவின்மை மற்றும்/அல்லது நோக்கற்ற வகையிலமைந்த கடமைப்பொறுப்புகள் பாரியளவில் அல்லது சிறந்த வகையில் அரசாங்க செயன்முறைகளில் மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த கடமைப்பொறுப்புகளை இந்த அறிக்கை கொண்டுள்ளது.*

*இந்த மீளாய்வு IRM இனால் சச்சினி டி பொன்சேகா உடன் இணைந்து தயாரிக்கப்பட்டிருந்ததுடன், சுயாதீன அறிக்கையிடல் பொறிமுறை (IRM) இன் சர்வதேச நிபுணர் குழுவினால் (IEP) மேற்பார்வை செய்யப்பட்டிருந்தது. சுயாதீன அறிக்கையிடல் பொறிமுறை (IRM) தொடர்பான மேலதிக தகவல்களுக்கு இங்கே தரப்பட்டுள்ள திறந்த அரசாங்க பங்குடமை (OGP) இணையத்தளத்தில் **"About IRM"** பிரிவைப் பார்க்கவும்.*

---

1 "IRM விதிமுறை கையேடு," திறந்த அரசாங்க பங்குடமை, https://www.opengovpartnership.org/documents/irm-procedures-manual